Regd No. M. 4900. 20-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு


ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 10-1-1948 சனிக்கிழமை மலர் 18.

## பொங்கல் விருந்து!

பகுத்தறிவு
க. சண்
சொத்
வேலூர்-
உரிமை



## பெரியார் சொற்பொழிவுகள்.

## பெரியார்

★

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

11-1-48வ அரியலூர்
12— புலியனூர்
13— திருச்சி
14— சேடர்பாளையம்
15— சென்னை
16— சைதாப்பேட்டை
17— பெரம்பூர்
18— வில்லிவாக்கம்
19— ஈரோடு.

## விடுதலை

தபால் மூலம்,

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 24-0-0 |
| ஆறு மாதம் | ரூ. 12-0-0 |
| மூன்று மாதம் | ரூ. 6-0-0 |
| ஒரு மாதம் | ரூ. 2-2-0 |

ஏஜண்டுகளிடம் நேரில்.

மாதத்துக்கு ரூ. 2-0-0

மானேஜர், "விடுதலை"

## காலண்டர்கள்

வரப்பெற்றோம்.

1. திராவிடன் பதிப்பகம், தபால் பெட்டி நெ. 18. வேலூர். (வ. ஆ)
2. ஹாமில்டன் பேப்பர் கம்பெனி, 6. சுங்குராம செட்டி தெரு ஜி. டி. சென்னை
3. தோழர். பி. ஏ. இளங்கோ 66. ஹிலால் சோப்பேக்டரி, 44. கடைத்தெரு, கூடலூர். ஒ. டி.

## உடனே எழுதுங்கள்.

உங்களுக்குத் தேவையான நமது இயக்கப் புத்தகங்கள் எது வேண்டுமானாலும் எங்களுக்கு உடனே எழுதுங்கள்.

நாதன் கம்பெனி லிமிடெட், கச்சேரி வீதி, ஈரோடு.

"குடி அரசி"ல் விளம்பரம் செய்யுங்கள்,

பம்பாய் தாராவி

## திராவிடநாடு பகுத்தறிவு நிலையம்

4-வது ஆண்டு நிறைவு விழா.

★

25—I—48வ ஞாயிறு மாலை 4-30 மணிக்கு, டம்பாய் தே. இ. ஆ. தி. மகாஜன சங்கத்தின் கூடவெளியில் ஷெ விழா நடைபெறும்.

தலைவர்:

சர்வதேச எழுத்தாளர் சங்க, இந்தியக்கிளை நிர்வாக உறுப்பினர், தோழர்

**எம். ஆர். ஜம்புநாதன் அவர்கள்.**

சொற்பொழிவாளர்கள்:

ஈரோடு "குடி அரசு" நிர்வாகி,

தோழர் ஷண்முகவேலாயுதம் அவர்கள்,

டம்பாய்த் தோழர்கள்:—

கு. ஸ்ரீனிவாசம் அவர்கள், பி. தொல்காப்பியம் அவர்கள்.

எஸ். சுப்பையா,
எம். எம். சுப்பையா,
கூட்டுச்செயலாளர்கள்.

எஸ். பெரியஸ்வாமி,
தலைவர்.

## THE TAMILIAN PRESS, ERODE.

## — தமிழன் பிரஸ் —

42, கச்சேரிவீதி, ஈரோடு.

★

எங்களிடம் உள்ள சிலிண்டர் & ட்ரெடில் மெஷின்கள், எலெக்ட்ரிக் பவரில் வேலை செய்வதால், எல்லாவித அச்சுவேலைகளையும் குறைந்த சார்ஜில் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படும்.

நிர்வாகஸ்தர்கள்:— நாதன் கம்பெனி லிமிடெட்.

## எங்களிடம் கிடைக்கும் நூல்கள்.

அர்ச்சுனன் நிலைய வெளியீடு.

ஆசிரியர் என். இ. பாலகுரு எழுதிய,

| | | | |
|---|---|---|---|
| 1. | புரட்சி முரசு | ரூ. | 0—12—0 |
| 2. | மக்கள் ஆட்சி | ,, | 0— 4—0 |
| 3. | இவள் விதவையாம் | ,, | 0— 3—0 |
| 4. | தமிழகம் இழந்த தளபதி | ,, | 0— 4—0 |

மற்ற புத்தகங்கள் மொத்தமாகவும் சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும். வேண்டுவோர் தேவைக்கு எழுதவும்.

புதுமை நிலையம்,
கடைக்குத் தெரு, கோடுமுடி.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பெருமையுடையவர் ஆற்றுவார் ஆற்றின்,
அருமையுடைய செயல்.

—திருவள்ளுவர்.


# குடி அரசு

10—1—48 சனிக்கிழமை.


## பொங்கல் புது நாள்!

★

பொங்கல் புது நாள் இந்த மாதம் பதினான்காம் நாள் புதன் கிழமை. இப்புது நாளிலே திராவிடத் தமிழ்த் தோழர்களுக்கு நமது வாழ்த்து உரியதாகுக! என நாம் வாழ்த்துக்கூற முன்வரவில்லை. திராவிடா! வாழ முயற்சி செய்! ஓய்வின்றி முயற்சி செய்! இன்பவுணர்ச்சி பொங்க முயற்சி செய்! இதுதான் நாம் திராவிடத் தோழர்களுக்குத் தரும் செய்தி.

மனிதன் மனிதனாக மதிக்கப்பட்டு, உழைப்போரே உயர்ந்தோர் எனக்கொண்டு, உழைப்புத் தொழில்களுக்கெல்லாம் தாய்த்தொழிலாக விளங்கும் உழவர்களே, உலகை உண்பித்து வாழச் செய்வோர் எனப்போற்றிய காலத்தில், பாடுபடும் பாட்டாளிகளின் மனம் பொங்கிப் பூரிப்புக்கொள்ளும் புது நாள் பொங்கல் நாள். அதன் பயனைப் பெற்று உண்டு வாழ்வோர், அத்தொழிலைப் போற்றி, அத்தொழிலாளர்களைப் போற்றி, அவர்தம் மகிழ்ச்சியிலே பங்கு கொள்ளும் திருநாள் பொங்கல் நாள். மழையிலும், பனியிலும் நனைந்து, காய்ந்து வருந்திய உழவோர், உழைத்த உழைப்பின் பயனைப் பெற்று, புதுப்பருவத்தைக் கண்டு புதிய வாழ்க்கைக்கு வழிகோலும் நாள் பொங்கல் நாள். நெல்லே உயிரென்று கண்டு புது நெல் பெற்ற புதுமையால், புத்தாடை பூண்டு, புழங்கும் பொருள்களையெல்லாம் புதுப்பித்து, வாழும் இடத்தையும் புதுப்பித்து, புதுப்பானையில் சமைத்து, புதுக்கறிகளுடன் புதிய பச்சிலையில் உண்டு, புத்துணர்ச்சி பூணும்நாள் பொங்கல் நாள். பொங்கல் நாள் புதுமை வீறு பெறும் நாள் உணவில், உடையில், உறையும் மனையில், உள்ளத்தில், செயலில், இவ்வாறு அகமும் புறமும் புதுமை. பார்க்குமிடமிங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் புதுமை.

புதுமை நிலையானதல்ல; புதுமை பழமையாகும்; மீண்டும் புதுமை தோன்றும். அப்புதுமையும் மகிழ்ச்சியோடு வரவேற்கப்படும். ஆண்டு தவறாமல் வந்து சென்ற பொங்கலும், அடுத்தடுத்த ஆண்டுகளில் வரவிருக்கும் பொங்கலும் இதைத்தானே நமக்குப் பாடமாக உணர்த்த முடியும்.

உழவுத்தொழிலே தலை சிறந்த தொழில் என எண்ணிய திராவிடர்,—எங்கு சுற்றியும் ஏருக்குப் பின்னால் கைகட்டி நின்றே வாழ வேண்டுமெனக் கண்ட திராவிடர், உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்யும் அடிப்படையில் அமைத்த பொங்கல் விழா! எவ்வாறு சங்கராந்தியாகப், போகிப்பண்டிகையாகக், கரிநாளாக, இருக்க முடியும்? உழுதொழிலைப் பாவமென்றும் உழவர்களைப் பாவியர் என்றும் கடிந்து எழுதி வைத்து, அன்றிலிருந்து இன்றுவரை அத்தொழிலைக் கைக்கொள்ளாது, எழுதி வைத்ததைப் பேணி வரும் ஆரியப் பார்ப்பனர்கள், எவ்வாறு பொங்கல் நாளில் கலந்து பூரிப்படைய முடியும்?

திராவிடத்தை உருக்குலைத்த பார்ப்பனர்கள் — திராவிடர்களின் வாழ்வையும், வாழ்வின் குறிக்கோளையும் கருகச் செய்த பார்ப்பனர்கள், அச்செயலுக்குத் திராவிடர்களின் ஒவ்வொரு செயல்களையும் மாற்றித், திருத்திப், புகுத்தித் திராவிடர்களுக்குரியதென எண்ணுமாறு ஒன்றையும் விட்டுவையாமல், ஆரிய வழிப்பட்டவர்கள் என எண்ணுமாறு வரி கோலப்பட்டதே பொங்கல்-சச்கராந்தியும் போகியுமான செயல். இச்செயல்தான் இன்று சண்முகம் அவர்களையும், ஆரியமும்—திராவிடமும் இரண்டறக் கலந்தது எனக் கூறுவதற்கு ஏதுவாக இருந்ததுமாகும்.

ஆரியமும்—திராவிடமும் கலந்தது. ஆனால் பாலும் நீரும் போல அல்ல. எண்ணெயும் தண்ணீரும் போல. இதோஎண்ணெய்! இதோ நீர்! சு. ம. இயக்கம், இதோ ஆரியம்! இதோ திராவிடம்! என உலகமறியப் பிரித்தெடுத்து உணர்த்தினும், இந்திக்கட்டாய எதிர்ப்புணர்ச்சி "அது உண்மைதான்" என உலகை அறிந்து கொள்ளச் செய்தது. அன்று தொட்டுத்தான் பூஜாமனோ பாவத்துடன் "சங்கராந்திப் பண்டிகையாக" இருந்த பொங்கல் நாள், தமிழ் நாளாகத், தமிழர் நன்னாளாகத், திராவிடர் திருநாளாகப், பொங்கல் புது நாளாக மலர்ந்தது, விரிந்ததென்ற உண்மையைத் திராவிடம் நன்கறியும்.

இப்புது நாளிலே நாம் அளிக்கும் பொங்கல் விருந்து, தந்தை பெரியார் அவர்கள் தமது சிந்தனைத் திறனால் பல ஆண்டுகளாகத் திராவிடர்களுக்கு அளித்து வந்த அறிவுரைகளாகிய பொன்னுரைகளேயாம். இதில் அத்தனையும் இடம் பெற்றது என்று சொல்ல முடியாது. ஏதோ நம்மால் இயன்ற அளவு இங்கு திரட்டித்தந்திருக்கின்றோம். இதனைத் தாராளமாய் அருந்துங்கள்! எனக் கூவி அழைக்கின்றோம். இவை உண்பதற்கு இனிப்பானவையாயிருக்க முடியாது. ஆயினும் இவற்றையுண்டு ஜீரணித்தால்தான், ஜீரணித்ததின் பயன் செயலுக்கு வந்தால்தான்—அந்தநாள்தான்—திராவிடத்தின் புதுநாளாக—இன்பநாளாக—இருக்க முடியும் என்ற நம்பிக்கையின் விளைவே இப்பொங்கல் விருந்து.

பட்டினியால், தரித்திரத்தால், ஏமாற்றம் வஞ்சகங்களுக்கு ஆளாகிப் பரிதவிக்கும் திராவிடமே! தமிழகமே! நெருக்கடி நெருங்குகிறது! வஞ்சகர்களின் தந்திரம் பெருகுகிறது. வல்லூறும் கழுகும் வட்டமிட்டுப் பறக்கின்றன. உன் வாழ்வை யொடுக்கப் புதுப் புதுச் செயல்கள் ஓங்குகின்றன! அஞ்சாதே! எதிர்த்து நில்! "வெற்றி உனதே! வாழ முயற்சி செய்!

# நினைவில் வையுங்கள்!

## திராவிடம் இன்றேல், விடுதலை முற்போக்கு இல்லை.

★

நம் எதிரிகள் காலித்தனம் செய்து கல்லையும் மண்ணையும் வாரி இறைத்துக் கழுதைகள் போலவும், நாய்கள் போலவும் கத்தி ஊளையிட்டும் மக்கள் ஓடாமல் வந்து கூடி இவ்வளவு நிசப்தமாக உட்கார்ந்து கவனிப்பதின் கருத்து என்ன? இன்றைய இந்தியா பூராவும் முக்கியமானதாகக் கருதிக் கவனித்துப் பேசப்பட்டு வரும் பாகப் பிரிவினைச் சங்கதியைப்பற்றி மக்கள் கொண்டுள்ள ஆர்வமும் கவனமுமேயாகும்.

### பாகப்பிரிவினை துரோகமோ பாவமோ அல்ல.

பாகப் பிரிவினை என்பது துரோகமானதோ குடும்பப் பற்றில்லாததோ அல்லது பாவமானதோ ஆன காரியம் அல்ல. அதிலும் இன்று நாம் கேட்கும் பாகப்பிரிவினை எந்த விதத்திலும் புதியதோ சாத்தியமற்றதோ ஆன காரியமல்ல.

### இந்தியர் ஏககுடும்பம் என்பது சூழ்ச்சி.

இந்தியா என்று, ஒரு பொதுக் குடும்பம் (நாடு) எப்போதும் இருந்ததில்லை. நம் குடும்பத்தின் (நாட்டின்) பயனை மற்றவன் அனுபவிப்பதற்கு ஆகப் பல குடும்பங்களை ஒன்றாகப் பிணைத்து வெள்ளையர் உருவாக்கிப் பயன் அனுபவித்து வருகிறார்கள். குடும்ப மக்கள் கூப்பாடு போடாமல் இருப்பதற்கு முன்னணியில் இருப்பவனை (ஆரியனை) சுவாதீனப்படுத்திக் கொண்டு அவனுக்குச்சற்று அதிக போஷணை கொடுத்து மற்றவர்களை மந்தகாரத்தில் ஆழ்த்தி வைத்துப் பலன் அனுபவிக்கச் செய்த சூழ்ச்சிதான் இன்று "இந்தியர் ஏககுடும்பம்" என்பது. இந்தியாவில் உள்ள நாம் எல்லோரும் ஒரு குடும்ப மக்கள் அல்ல. ஒரு தாய் வயிற்றுப்பிள்ளையுமல்ல. நம் எல்லோருக்குமாக ஒரு தகப்பனும் இல்லை. நாம் வேறு வேறு குடும்பத்தவர்கள். நம் தாய் தந்தையர்கள் வேறு வேறு. சிறையில் இருப்பவர்களுக்குச் சூப்பிரண்டும் ஜெயிலரும் குடும்பத் தலைவராக முடியுமா? கான்விக்ட் வார்டர்கள் நமது காப்பாளர்களாகி விடுவார்களா? அதுபோல் வெள்ளையருக்காவது, அவர்களின் சமீபத்திய வர்க்கத்தாரான ஆரியர்களுக்காவது, நமக்குத் தலைவர்களோ காவலாளர்களோ ஆக உரிமையில்லை. இதை நான் ஆங்கிலேயர் எழுதிய சரித்திரப்படியும் ஆரியர்கள் எழுதி வைத்திருக்கும் சரித்திரப்படியுமே சொல்லுகிறேன்.

### பிரிவினை இன்றேல் பெரும் நாசமே.

சொந்த சகோதரர்கள், தாங்கள் ஒருவருக்கொருவர் பிரிந்து கொள்ள வேண்டும் என்று சொன்னதை மூத்தவன் கேட்காமல், தன் சுயநலத்தையும் சுரண்டுதலையும் உத்தேசித்துப் பிரிந்துகொள்ள சம்மதிக்காவிட்டாலே, கலகம் எற்பட்டு மொத்தக்குடும்பமும் நாசமாய்ப் போய்வருவதை நாம் தினமும் பார்த்து வருகிறோம்.

அப்படியிருக்க, வேறுவேறு குடும்பத்தார் அதுவும் வேறு வேறு நாட்டாரும், வேறு வேறு மதத்தாரும், வேறு வேறு வர்க்கத்தாருமானவர்களைச் சேர்த்து பிணைக்கப்பட்ட குடும்பத்தார் பிரிந்து போக வேண்டுமென்றால், "மூத்தவன்" மேல் பார்வை பார்த்து வருபவன் இணங்காவிட்டால், தடுத்தால் கலகம்குத்துப்பழி வெட்டுப்பழி எற்படுவது சகஜம் தான். வீட்டையும் கடையையும் இழுத்துப் பூட்டுவதும், நிலத்தை தரிசுபோடச் சண்டித்தனம்செய்வதும் அதிசயமல்ல. கண்டிப்பாய் இது நடந்துதான் தீரும். அதிலும் இந்த நாட்டின் உண்மையான மக்களாகிய நாம், இந்த நாட்டுக்குப் பிழைக்க வந்த அந்நிய மக்களிடமும், சுரண்ட வந்த அந்நிய கூட்டத்தாரிடமும். பங்குகேட்பது போலவும் அவன் மகாசொந்தக்காரன் கரிசனக்காரன் போல் மறுத்து வேஷம் போட்டுக் கள்ள அழுகை அழுது தடுப்பதும்எப்படி இருக்கிறதென்றால், ஒரு தனவானின் உண்மையான மக்கள் குடும்பத்தை, தகப்பனின் வைப்பாட்டி மகன் வந்து பாத்தியம் கொண்டாடி, சொந்த மக்களை அடக்கி ஆள்வதுபோல் இருக்கிறது. முஸ்லிம்கள் தாங்கள் அதிகமாக வசிக்கும் நாட்டைப்பிரித்து, அந் நாட்டு நலனுக்கு வேண்டிய சட்டதிட்டங்களைச் செய்துகொள்ளத் தங்களுக்கு அதிகாரம் வேண்டுமென்று, தங்களை ஜெயித்துச்சுவாதீனம் கொண்ட வெள்ளைக்காரர்களைக் கேட்கிறார்களே தவிர ஆரியனிடம் கெஞ்சவில்லை.

### காட்டிக்கொடுத்த என்னை, கைவிடலாமா என்கிறான் ஆரியன்.

திராவிடர்கள் தங்களுடைய, தாங்கள் பாரம்பரியமாய்ச் சரித்திர காலம் தொட்டு ஆண்டு அனுபவித்து வந்த திராவிட நாட்டைக் கைப்பற்றிக் கொண்ட வெள்ளையரைத் தங்களுக்குப் பிரித்துக்கொடுத்துத் தங்கள் தேவைகளுக்குப் பழக்க வழக்கமான உணர்சிக்கு எற்றபடி சட்டதிட்டம் செய்துகொண்டு முற்போக்கடையச் சுதந்தரமும் சவுகரியமும் செய்துகொடுக்கும்படி (வெள்ளைக்காரர்களைக்) கேட்கின்றார்கள். இந்நிலையில் குறுக்கே நிற்க ஆரியர்களுக்கு என்ன உரிமை? இவர்கள் இதைப்பற்றிப் பேசவோ கலந்து கொள்ளவோ என்ன பாத்தியம் என்று தான் நான் கேட்கிறேன்.

ஆரியனுக்கு வெள்ளையனிடம் உள்ள உரிமை எல்லாம் "நான் உள்ளாளாயிருந்து சூழ்ச்சிசெய்தும் சதி செய்தும் முஸ்லிமிடமிருந்தும் திராவிடனிடமிருந்தும் உன் கைக்கு நாடு வரும்படி செய்தேனே, மறுபடியும் அவர்கள் ஆதிக்கத்திற்கு விடுகிறாயா பிறகு என் கதி என்ன?" என்று கேட்பதுபோல் தடுப்பதல்லாமல் வேறு என்ன பாத்தியம் என்று கேட்கிறேன்.

வெள்ளைக்காரன் இந்தியாவின் பல நாடுகளையும் கைப்பற்றும்போது ஆரியனுக்கு எங்காவது நாடு இருந்ததா என்று கேட்கிறேன்.

### ஏன் பிரிவினை?

ஆதலால் நாம் வெள்ளையனிடம் நமது நாட்டுச் சுதந்தரத்திற்கும், நமது நாட்டு முற்போக்குக்கும், நமது நாட்டு மக்கள் சுயமரியாதைக்கும் பிரிவினை கேட்டால் இந்த ஆரியன் யார் இதைத் தடுக்க, என்கிறேன்.

தோழர் காந்தியார் முதலில் சொன்னார் "அவரவர்கள் நாடுகளை அவரவர்கள் பிரித்துக்கொள்ள வேண்டுமானால் நான் ஆட்சேபிக்கப் போவதில்லை" என்று.

### பிச்சைக்கு வந்தவன் பெண்டுக்கு மாப்பிள்ளையா?

ஆனால் ஆச்சாரியார் "தாயை வெட்டுவதா, பிள்ளையை வெட்டுவதா, மாட்டை அறுப்பதா, கூரையைப் பிரிப்பதா" என்று பழங்கால விதவைகள் போல் ஒப்பாரி வைத்தழுகிறார். தோழர் சத்தியமூர்த்தியார் "வீட்டைப் பிரிக்க வேண்டுமென்பவர்களை வெளியில் பிடித்துத்தள்ள வேண்டியதுதான்" என்றார். தோழர் சவர்க்கார் "நாட்டைப் பிரித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டால் அதை பலாத்காரத்தால் அடக்கிவிட வேண்டும்" என்றார். இவர்கள் எல்லோரும், பிச்சைக்கு வந்தவன் பெண்டுக்கு மாப்பிள்ளையாகப் பார்க்கிறான் என்பது போலல்லாமல், வேறு என்ன பாத்தியம்

கொண்டு இப்படிப் பேசுகிறார்கள் என்பதை நீங்களே சிந்தித்துப்பாருங்கள்.

## வேதகால முதல், பேதம் தானே!

நாம் கேட்கும் பிரிவினை இன்று நேற்றுக் கிளம்பியதில்லை. குறிப்பாக திராவிடர் ஆரியர் விஷயமும் இவர்களுக்குள் ஒற்றுமை இல்லாத தன்மையும் போராட்டமும் வேதகாலம் முதல் இருந்து வருகிறது.

திராவிடர்கள் ஆரியர்களால் பல கஷ்ட நஷ்டங்களும் இழிவுகளும் அனுபவித்ததாகவும், ஆரியர்களைத் திராவிடர்கள் தங்களது பிறவி எதிரிகளாகக் கருதி வந்ததாகவும், ஆதாரங்களும் அனுபவ பூர்த்தியான நடத்தைகளும் இன்றும் காணப்படுகின்றன.

இன்றும் ஆரியன் திராவிடனைச் சூத்திரன் தொடக்கூடாதவன் என்கிறான். சண்டாளன் என்கிறான். அந்தப்படி எழுதிவைத்திருக்கும் புஸ்தகத்தைக் கடவுள் வாக்கு, சாஸ்திரம், மனிதர்கள் நடந்துகொள்ளவேண்டிய விதி என்கிறான். ஆரியருடன் கூட்டு வாழ்க்கைச் சரித்திரம் தெரிந்த காலம் முதல், ஆரியனுக்குத் திராவிடன் கீழ் ஜாதியானாகவும் சகல துறைகளிலும் பாடுபட்டு உழைத்துப் போடவேண்டியவனாகவுமே இருந்துவந்திருக்கிறான். இப்படிப்பட்ட நிலைமையில் மானமற்ற சில திராவிடர்கள்-தங்கள் பிறவியில் உறுதியோ நம்பிக்கையோ அற்ற திராவிடர்கள், ஆரியனை மதகுருவாகவும் அரசியல் குருவாகவும் கருதி அவன் பின்னால் திரிகிறார்கள் என்றால், இதைவிட ஒரு சமூகத்துக்கு வேறு மானக்கேடென்ன என்று கேட்கிறேன்.

இந்தியாவில் திராவிடம், ஆரிய வர்த்தம் என்ற பிரிவினை வெகு தெளிவாக இன்றும் இருக்கிறது. ஆதாரமும் இருக்கிறது. அப்படி இருக்கத்திராவிட நாட்டை பரதநாடு என்று சொல்லவோ, பரத கண்டம் என்று சொல்லவோ, பாரத தேசம் என்று சொல்லவோ என்ன உரிமை இந்த ஆரியர்களுக்கு இருக்கிறது என்றுகேட்கிறேன்.

அதுமாத்திரமல்லாமல் மானம் கெட்ட தமிழர்கள் பலர் அவர்கள் கூடச் சேர்ந்து கூப்பாடு போடுகிறார்களே. இவர்களுக்குத் தேசாபிமானமோ சுயமரியாதையோ தங்கள் பிறவியில் நம்பிக்கையோ இல்லையா என்று கேட்கிறேன்.

பரதன் திராவிட நாட்டை எப்போது ஆண்டான்? பரதன் என்பவனுடைய ஆட்சி திராவிடத்தில் எப்போதும் இருந்ததில்லை. திராவிட நாட்டை திராவிடர்களே ஆண்டிருக்கிறார்கள். முஸ்லிம் ஆட்சி கூட மிகச் சிறிது காலம் சில இடத்தில் இருந்தது என்பதல்லாமல், அதுவும் ஆரியர் குடியேறிய நாடுகளைப் பூரணமாக 1000—க் கணக்கான வருஷங்களாக ஆண்டது போல் ஆண்டதாகச்சொல்ல முடியாது. திராவிட மன்னர்கள் ஆட்சி வேண்டுமானால் ஆரிய நாடுகளிலும் இருந்திருக்கிறது. ஆனால் ஆரியர் சூழ்ச்சியின் பயனாய் இந்த நாட்டை ஆண்ட பழம் பெரும் மன்னர்களின் சமுதாயங்களான திராவிடர்கள் ஆரியர்களுக்கு அடிமை ஜாதியாகவும் கீழ்த்தர ஜாதியாகவும் தீண்டாத ஜர்தியாகவும் ஆக்கப்பட்டுத் திராவிட நாட்டிற்கும் ஆரியர்கள் பெயர்கள் கொடுக்கப் பட்டுவிட்டன.

## பாம்பு வாயில் தவளை.

இன்று திராவிடம் பாம்பு வாயில் சிக்கிய தவளை விழுங்கப்படுவது போல், திராவிட சமுதாயம் அவர்களது கலை மானம் ஆகியவைகள் உட்பட ஆரியப் பாம்பால் விழுங்கப் படுகிறது. இப்போது தவளையாகிய திராவிடத்திற்கு கடைசி மூச்சு நடக்கிறது. அதன் அபயக் குரல் கேட்பது போல் பிராணாவஸ்தைக் கூப்பாடுபோடுகிறது. இந்தச் சமயத்தில் பாம்பைத் துண்டித்து விட்டால்தான் திராவிடம் என்கின்ற தவளை பிழைக்கும். இல்லாவிட்டால் இன்னும் கொஞ்ச நேர (கால) த்திற்குள் தவளை (திராவிடம்) மறைந்தே போகும். இப்படிப்பட்ட நிலையில் ''அய்யோ பாம்பை வெட்டுவதா அடிப்பதா பாவம்'' என்று மடையனும் மானமற்றவனும்தான் சொல்லுவான்.

இன்று திராவிடனுக்கு இந்தத் திராவிட நாட்டில் என்ன யோக்கியதை இருக்கிறது. ஆரியர்களையும் திராவிடர்களையும் ஒத்திட்டுப் பாருங்கள். ஆரியன் தெருகூட்டுகிறானா? மூட்டை தூக்குகிறானா? வண்டி ஓட்டுகிறானா? பியூனாய் இருக்கிறானா? உழுகிறானா? அறுப்பு அறுக்கிறானா? சரீரத்தில் இருந்து ஒரு துளிவேர்வையோ நகத்தில் கடுகத்தனை அழுக்கோ, படியும்படி ஏதாவது உடலுழைப்புச் செய்கிறானா? ஆனால் அவன் வாழ்வையும் திராவிடன் வாழ்வையும் ஒப்பிட்டுப்பாருங்கள்.

## ஆரியர் உயர்வுக்கும், திராவிடன் சீர்கேட்டுக்கும் காரணம் என்ன?

திராவிடன்—சூத்திரன். திராவிடப் பெண் சூத்திரச்சி. ஆரியர் வீட்டு வேலைக்காரர்கள், அத்தனை பேரும் திராவிட(சூத்திர)ர்கள். மற்றும் திராவிடப் பழம் பெருங்குடி மக்கள் ஈயத்தில் கண்ணாடிக் கல்லில் நகை போடுவது. ஆரியர்கள் இன்றைக்கும் பிச்சை எடுத்தாலும் வைரம், கெம்பு, பொன் நகைகள் போடுவது. திராவிடர்கள் 100-க்கு 90-பேர்கள் தற்குறி. ஆரியர்கள் 100-க்கு 90-பேர்கள் படித்தவர்கள், மகா பண்டிதர்கள். திராவிடர்கள் உத்தியோகத்தில் 100-க்கு 90-பேர்கள் பியூன்கள், போலீசு காவலர்கள், தோட்டி தலையாரிகள். ஆரியர்கள் 100-க்கு 90-உத்தியோகங்களில் கலெக்டர்கள், சூப்பிரண்டுகள், ஹைகோர்ட் ஜட்ஜிகள் முதலிய பெரும் பெரும் பதவிகள். ஆரியன் பிச்சை எடுத்தாலும் அவன் பிள்ளை அய். சி. எஸ். ஆகிறான். திராவிடன் ஜமீன்தாரனாய் இருந்தாலும் அவன் மகன் தெருவில் காவாலியாய்க் காலியாய் ஆரிய அடிமையாய்த் தற்குறியாய் மடையனாய்த் திரிகிறான். திராவிட மிராசுதாரர்கள் மக்கள் எல்லாம் தற்குறியாய் மூட்டை தூக்குகிற நிலைமைக்குப் போகிறார்கள். இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? திராவிடன் சிந்திக்க வேண்டாமா என்று கேட்கிறேன். கடவுள் பக்தியென்று கொட்டையும் சாம்பலும் மண்ணும் அணிந்துகொண்டு பார்ப்பான் பின்பாகத்தைப் பார்த்துக்கொண்டு நின்று கும்பிட்டுஅவன் கால் தூசியை சடகோபமாகக்கொண்டு கடவுள் பக்தனாவதுபோல், பார்ப்பானுக்குப் பின்னால் நின்று கொடியைப்பிடித்து அவனுக்கு ஜே போட்டு தேசபக்தனாக காட்டிக்கொள்ளும் மானமற்ற திராவிடனைக் கேட்கின்றேன். இதே மேடைக்கு அழைக்கிறேன். வந்து பதில் சொல்லட்டும்.

## காங்கரசால் கண்ட பயனென்ன?

இந்த மானமற்ற வயிற்றுச்சோத்தும் பதவிப்பித்துப் பிடித்துக் காந்திக்கு ஜே போடும் தேசபக்தனைக் கேட்கிறேன். திராவிடர்களுக்காக ஆரிய ஸ்தாபனமாகிய காங்கரஸ் இதுவரை செய்தது என்ன? இந்த 50 வருஷ காங்கரஸ், இந்தஇருபதுவருஷக்காந்தி காங்கரஸ் இந்தநாட்டுத் திராவிடருக்கு என்ன செய்தது என்று கேட்கிறேன்.

இந்த ஊரில் நெசவுக்காரர்கள் ஆதிக்கம். அதில் 4, 5 பிரிவு உண்டு. தேவாங்கர், சாலியார், கைக்கோளர், பட்டு நூல்காரர் எனவும் இவற்றுள் பல பிரிவும் உண்டு. இவர்களுக்கு ஆவது என்ன நன்மை செய்தது? கன்னட தேவாங்கரில் 3 கட்சி; தெலுங்க தேவாங்கரில் 2 கட்சி; கைக்கோள முதலியார்மார்களில் 3 கட்சி; பட்டு நூல்காரரில் 2 கட்சிஎன்று சொல்லப்படுகிறது. இதுபோல்தானே ஜாதிக்கு ஜாதி கட்சியும்கலகமும் உண்டாக்கிப் பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்தி அவர்கள் சுகமாக வாழ முடிந்ததேதவிர, காங்கரசால் நெசவாளிக்கு இன்ன நன்மை ஏற்பட்டது என்று எந்தத்தேசபக்தனாவது இந்த மேடைக்கு வந்து சொல்லட்டும் ஆண்மையும் தைரியமும் இருந்தால் என்று கேட்கிறேன்.

தேவாங்கன் முதலியாரை ''கைக்கோளப் பயல்'' என்பதும், முதலியார் தேவாங்கனை ''சேடப்பயல்'' என்பதும், இருவரும் தெலுங்கனை ''வடுகப் பயல்'' என்பதும், இவர்கள் என்னைக் கன்னடியப் பயல் என்பதும்தானே பார்ப்பனக் காங்கரசால் நான்கண்ட பலனாய் இருக்கிறது.

## இதுதானா தேச பக்தி?

இப்படிநாம் ஒருவருக்கொருவர் அந்தப்பயல் இந்தப் பயல் என்று பேசிக்கொள்கிறோம். ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிட அருவை கொள்கிறோம். ஒருவருக்கொருவர் கீழ் ஜாதிக்கு ஆதாரம் வைத்திருக்கிறோம். ஆனால் பார்ப்பார ஜாதி மாத்திரம் அப்படியே பரிசுத்த ஜாதியாக நம்மாலேயே கருதப்படுகிறது. அவன் வீட்டில் சாப்பிடுவதைப் பெருமை என்பதிலோ அவனைக் கைகூப்பித் தொழுவதிலேயோ அவனுக்கு "ஜே" போட்டுச் சேவகம் செய்வதிலேயோ நம்மவர்களுக்குச் சிறிதும் சங்கோசமில்லை. அதிருப்தி இல்லை. மான உணர்ச்சியும் இல்லை. இதுதானா தேச பக்தி? இதுதானா காங்கரசினால் நாம் அடைந்த பலன்? என்று சிந்தித்துப் பாருங்கள். ஆனால் காங்கரசால் பார்ப்பான் நிலை என்ன? நன்றாய் யோசித்துப் பாருங்கள்.

நான் சொல்லுகிறபடி திராவிட நாடு திராவிடருக்கு என்று பிரிக்கப்பட்டு ஆட்சி நடந்தால் இந்த நிலை இருக்குமா? என்று பாருங்கள். தேசபக்தி தேசீய உணர்ச்சி என்று பேசுகிற மடையர்கள் நம்கூட்டத்தில் கல்லைப் போடவும், மண்ணைப் போடவும், நாய்கள்போலக் குரைக்கவும், காலித்தனம் செய்யவும் கற்றுக்கொண்டு அவைகளைத்தான் தேசீயமென்றும், தேசபக்தியென்றும் கருதிக்கொண்டிருக்கிறார்களே அல்லாமல் நம் நாடு நாம் பிறந்த நாடு, நம் பெரியோர் மேன்மையாக வாழ்ந்து ஆண்ட நாடு, பிழைக்கவந்த ஆரியர்களால் மிலேச்ச நாடாக ஆகி, நம் பாஷை மிலேச்ச பாஷையாகி நம் சமூகம் மிலேச்சர்—அரக்க-சூத்திர-திருட ஜாதியாக ஆக்கப்பட்டுவிட்டதே என்கின்ற கவலை எவருக்கு இருக்கிறது? என்று கேட்கிறேன்.

இந்தியாவைத் துண்டாக்குவதா என்று கேட்கிறார்கள். நான் கேட்கிறேன், அவர்களை, இந்தப் பார்ப்பானுக்குக் கீழ் ஜாதியாய்இருப்பதாஎன்று. இதில் எது கெடுதி?

## காலித்தனம் பிரச்சினையைத் தீர்க்குமா?

நான் கேட்பது என்ன? மேல்ஜாதியாய் மேல்மகனாய் இருந்த திராவிடனே, நீ கீழ் ஜாதியாய் கீழ் மகனாக இருக்கச் சம்மதிக்கிறாயா? அல்லது பல ஆயிரக்கணக்கான வருஷங்களாகப் பிரிந்து இருந்து பெருமையாய் வாழ்ந்த நீ, ஆரிய வாழ்வுக்கு ஆக ஒன்றாக்கப்பட்ட நீ இப்போது பிரியாமல் இருக்க வேண்டுமென்கிறாயா? இந்த இரண்டில் உனக்கு எதுவேண்டும் சொல்லு. வந்து மேடைமீது ஏறிச் சொல்லு. கல்லுப் போட்டுக் காலித்தனம் செய்வதால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது. நீ அயோக்கியனுக்கு அடிமையாய் இருந்து மானத்தை விற்று வயிறு வளர்க்கும் ஈனனாக, கோழையாக ஆகிவிட்டாய் என்பதை நீ மறைவிலிருந்து காலித்தனம் செய்வதாலும், நிரபராதிகள் மீது கல்லைப் போட்டு அவர்கள் மண்டை உடைந்து ரத்தப் பெருக்கெடுத்துப் பலர் இப்பொழுது ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டதாலும் நன்றாய் விளங்கிவிட்டது.

உனக்கு உண்மையான உணர்ச்சி, கலப்பற்ற திராவிட ரத்தம் இருந்தால் மேடைக்குவா. பேசு. தலைவணங்கிக் கேட்கிறேன். அதில்லாமல் உன்காலித்தனம் என்ன பலனைக் கொடுக்கும்? இதுவரை இந்த இடமே கண்டிராத ஒரு பெரிய கூட்டத்தை இங்கு இப்போது கூட்டிவிட்டதுதான் காலித்தனத்துக்குப் பதில்.

அது உன்னிடம் உள்ள சரக்கு இன்னது என்று காட்டிவிட்டது. என் பேச்சை மக்கள் கேட்கக்கூடாது என்று நீங்கள் செய்த சூழ்ச்சிகள், கிரமமாக இயற்கையாக வரக்கூடிய மக்களைவிட 2, 3 மடங்கு மக்கள் அதாவது 30-ஆயிரம், 40-ஆயிரம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இதோசேர்த்து விட்டது. இன்று இல்லாவிட்டாலும் நாளைக்காவது இங்கு கூட்டம்போட்டு இவைகளுக்குச் சமாதானம் சொல்லு.

## இந்தியா பிரிவதே அதன் இயற்கை அமைப்பு.

ஆகவே நானோ ஜனாப் ஜின்னாவோ இந்தியாவைப் பிரிக்கவேண்டும் என்பதற்கு ஆகக் கவலைப்படாதீர்கள். கண்டிப்பாகப் பிரிக்கப்படத்தான் போகிறது. இன்று இப்போது காலித்தனம் செய்த திராவிடத் தோழர்கள் கூட, அந்தப் பிரிந்த திராவிட நாட்டில் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு இப்படிப்பட்ட ஈனத்தனமாக நடந்து கொள்ளவேண்டிய அவசியமில்லாமல், மானத்தோடு வாழப்போகிறார்கள் என்று இப்போதே உறுதி கூறுகிறேன்.

முன்பு 4, 5 மாகாணமாக இருந்த இந்தியா இன்று 11 மாகாணமாக ஆகவில்லையா? பர்மா பிரிக்கப்பட்டு விடவில்லையா? இலங்கை பிரிந்திருக்கவில்லையா? காங்கரஸ்காரர்கள் இந்தச் சென்னை மாகாணத்தை 4 மாகாணமாகப் பிரிக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கவில்லையா? சென்ற சில வருஷமாக ஆந்திரா—தமிழ்நாடு வேறு வேறு பிரிக்கப்பட வேண்டுமென்று கிளர்ச்சி நடக்கவில்லையா? நான் பிரிக்கவேண்டுமென்பது இவைகளில் எதற்குப் புறம்பானது. இந்தியாவைத் துண்டுபோடாதே என்கிறது ஒரு கூலித் தேசியப் பத்திரிகை. இந்தியா எங்கு ஒன்றாக இருக்கிறது? எப்போது இருந்தது?

## இதற்கெல்லாம் பெயர் என்ன அப்பனே!

இன்றும் இந்தியாவில் ஆங்கிலேயர் சம்பந்தமில்லாத நாடுகள் கூடப் பல இருக்கின்றன.

பிரஞ்சு இந்தியா, போர்ச்சுகல் இந்தியா, நேப்பாள இந்தியா, ஆப்கானிஸ்தான இந்தியா என்ப பல பிரிவுகள் பிரிட்டிஷ் ஆட்சிக்குச் சம்மந்தமில்லாமலே இல்லையா? இதனால் இந்தியா துண்டுபட்டதாக ஆகாதா? இதைப்பற்றி நமக்கு எப்போதாவது கவலை ஏற்பட்டதுண்டா?

இவை தவிர பிரிட்டிஷ் இந்தியா ஆட்சிக்கும், ஆட்சி முறைச் சட்டங்களுக்கும் கட்டுப்படாத 584 சுதேச சமஸ்தான இந்தியாக்கள் இல்லையா? அவை காங்கரஸ் சம்மந்தமில்லாமலும் காங்கரசை எதிர்த்துக்கொண்டும் இருக்கவில்லையா? அதனால் வந்தகேடென்ன என்று கேட்கிறேன்.

## ஆட்சி வேறுபாட்டால் அடையும் நன்மைகள்.

இந்தியா ஒரே ஆட்சி முறையில் இருப்பதற்கும், வேறு வேறு ஆட்சி முறையில் இருப்பதற்கும், ஆட்சியில் உள்ள வித்தியாசங்களைச் சற்று கவனித்துப் பாருங்கள்.

திருவாங்கூர் கொச்சியை எடுத்துக்கொள்ளுங்கள். அங்குள்ள ரோட்டுகள் சந்து பொந்தெல்லாம் கண்ணாடிபோல், சிமெண்ட் தரைபோல் இருக்கின்றன. இங்கு உள்ள ரோட்டுகள் பல்லாங்குழிபோல் இருக்கின்றன. அதிலும் காங்கரஸ் ஆட்சி வந்த பிறகு ரோட்டுகளில் உள்ள ஒவ்வொரு பள்ளங்கள், வண்டி குடைகவிழ்ந்தால் வீதியில் நடப்பவருக்கு வண்டியும் மாடும் வண்டிக்காரனும் தெரிய முடியாத மாதிரியில் பள்ளத்தாக்குகள் போல் இருக்கின்றன.

படிப்பு வசதியோ அங்கு மொத்த ஜனத்தொகையில் 100க்கு 30 பேர்களுக்கு மேல்ஆகப் படித்தவர்களாகவும், வயது வந்தவர்களில் 100க்கு 60 பேருக்கு 70 பேருக்கு மேலாகவும் படித்தவர்களாக இருக்கிறார்கள். இங்கு பார்ப்பனர் தான் 100க்கு 100 பேர் ஆண் பெண் அடங்கவும் படித்திருக்கிறார்கள். படியாதவர்கள் 100க்கு 10 பேர் கூட இல்லை. உத்தியோகங்களில் அங்கு சகல ஜாதிமத வகுப்பாரும் விகிதாச்சாரப்படி அனுபவிக்கிறார்கள். இங்கு பார்ப்பனருக்குத்தான் ஏகபோகம். பெயருக்குதான் முஸ்லிம்களும் இந்தியர், ஆதிதிராவிடரும், இந்துக்கள், எல்லோரும் பாரதமாதா புத்திரர்கள் என்று சொல்லுகிறார்களே தவிர, பார்ப்பனர்கள் சட்டப்படி பிறந்த பாரத புத்திரர்களாகவும், மற்றவர்கள் சட்ட விரோதமாகப் பிறந்த அநுலோம புத்திரர்களாகவுமே மதிக்கப்படுகிறது. சமத்துவபங்கே நமக்கு இல்லை என்று சொல்லப்படுகிறது.

ஆட்சி நிர்வாகத்திலும் தனி அரசனு

[தொடர்ச்சி 16ம் பக்கம்]

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# நாகரீகமும் நமது கடமையும்.

★

''நாகரீகம்'' என்கின்ற வார்த்தைக்குப் பொருளே பிடியில் சிக்காத ஒரு விஷயமாகும். ஒவ்வொருவரும் 'நாகரீகம்' என்பதற்கு ஒவ்வொருதனிப் பொருள் கூறி வருகிறார்கள். கண்ணோட்டம் என்கிற தலைப்பின் கீழ், குறளில் நாகரீகம் என்கிற வார்த்தை. வள்ளுவரால் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதாக நான் 10, 20 வருஷங்களுக்கு முன்பு பார்த்ததாக ஞாபகம். அது தாட்சண்ணியம், அடிமை என்கிற பொருளில் உபயோகப்படுத்தப் பட்டிருப்பதாகவும் எனக்கு ஞாபகம்.

### நாகரீகமும் மக்களின் மாறுதல்களும்.

நாகரீகம் என்கிற வார்த்தைக்கு எந்தக் கருத்தை வைத்துக்கொண்டு பேசினாலும் மக்கள் சமூகம், நடை, உடை, ஆகாரம் மற்றும் எல்லாப் பாவனைகளிலும் பெரிதும் மாறுபட்டிருக்கிறது. எந்த ஆதாரத்தினால்தான் இவைகள் வேறுபட்டிருக்கிறதென்று கூறமுடியாது. எப்படியோ எல்லாம் மாறுதலில்தான் போய்க்கொண்டிருக்கிறது. நம்முடைய பெண்கள் முன்பு முழங்கைக்குக் கீழும் இரவிக்கை அணிந்துவந்தார்கள். பின்பு மேலேறியது. மறுபடி கீழே இறங்கியது. இப்பொழுது மறுபடியும் மேலேயே போய்க்கொண்டிருக்கிறது. மேல்நாட்டு ஸ்திரீகளும்—தெருக்களில் தெருக் கூட்டுவதுபோன்ற ஆடைகளை முன்பு அணிந்து வந்தார்கள். அந்தக்காலத்தில் துணிகளைத் தூக்கிப் பிடித்துக்கொள்ளப் பணம்படைத்தவர்கள் ஆள்களை நியமித்துக்கொண்டிருந்தார்கள். அது அக்கால நாகரீகம். இப்பொழுதோ என்றால், ஆடைவிஷயத்தில் மேல்நாட்டுப் பெண்களும் எல்லாவற்றையும் சுருக்கிக்கொண்டு விட்டார்கள். அதை நாம் இப்பொழுது நாகரீகமென்றுதான் கருதுகிறோம்.

### பற்றுகளை விடுத்துப் பார்ப்பீர் உண்மையை.

நாம் இவைகளைப்பற்றி எல்லாம் பேசும்பொழுதும், யோசிக்கும் பொழுதும் எந்தவிதப்பற்றுதலும் இல்லாமல், அதாவது ஜாதி, மதம், தேசம் என்பன போன்ற பற்றுகளை விட்டுவிட்டுச் சுயேச்சையாகச் சீர்தூக்கிப் பார்த்தால்தான், விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அதன் உண்மையும் அப்பொழுதுதான் விளங்கும்.

ஒரு காலத்தில் சாம்பலைப் பூசிக் கொண்டு சிவசிவா என்று ஜெபிப்பதுதான் யோக்கியமாகக் கருதப்பட்டது. இன்றையக்காலதேசவர்த்தமானங்கள், மேல்சொன்ன விஷயத்தைக் கேலி செய்கிறது.

புருஷன் பெண்ஜாதி என்கிற இரு சாரர்களை எடுத்துக்கொண்டாலும், முன்பு 'கல் என்றாலும் கணவன்' 'புல் என்றாலும் புருஷன்' என்று மதித்து அடிப்பூதுவதே ஒரே கடமையென்று நடந்துவந்த பெண்களைப் பற்றிப் பெரிதும் மதித்து வந்தார்கள். ஆனால் இன்றோ புருஷனிடம் மனைவியானவள் நான் உனக்கு வேலைக்காரியா? அடிமைப்பட்ட மாடா? ஜாக்கிரதையாய் யிருந்தால் சரி, இல்லாவிட்டால் எனக்கும் சம அந்தஸ்தும், சமஉரிமையும், சர்வ சுதந்தரமும் உண்டு என்று கர்ஜனை செய்யும் பெண்களையே நாகரீகம் வாய்ந்தவர்களென்று கருதுகிறோம்.

முன்பு புராணத்தைப் பற்றியும், மதத்தைப் பற்றியும் பேசுவதுதான் வித்வத் தன்மையாக இருந்தது. ஆனால் அது இன்று குப்பையாகிப் பரிகசிக்கத் தக்கதாக ஆகிவிட்டது. புத்திக்கும் அறிவிற்கும் பொருத்தமில்லாத முரட்டுப் பிடிவாதத்தில் முன்பு நம்பிக்கையிருந்ததைச் சிலாக்கித்துப் பேசினோம். ஆனால் இன்றைய தினம் பிரத்தியக்ஷமாக எதையும் எடுத்துக் காட்டித் தெளிவு படுத்துவதையும் - விஞ்ஞானம் போன்றதான அறிவியக்க நூல்களைக் கற்றுணர்ந்த வல்லுனர்களையுமே நாம் பெரிதும் மதித்து வருகின்றோம்.

### இடம் காலங்களுக்கு ஏற்ப நாகரீகம்.

நாகரீகம் என்பது நிலைமைக்கும் தேசத்திற்கும் - காலப் போக்கிற்கும் தக்கவாறு விளங்குகிறது. கால தேச வர்த்தமான- வழக்கத்தையே யொட்டி ''நாகரீகம்'' காணப்படுகிறது.

காலப் போக்கானது எந்தத் தேக்கத்தையும் உண்டாக்குவதில்லை - ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றவும்—புரட்சி ஏற்படவும் செய்கிறது.

மீசை, தலைமயிர் இவைகளைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டுப் பேசினீர்கள். எது நாகரீகமென்று கருதுகின்றோமோ, அது பெருத்த அஜீர்ணத்துக்கு வந்துவிடுகிறது. மீண்டும் அந்த நிலைமையானது மாறிக் கொண்டு போகத்தான் செய்கிறது.

ஒருவிஷயமானது வாய்ச் சாமர்த்தியத்தினால் செலாவணியாகி விடும். அது மெய்யோ—பொய்யோ சரியோ—தப்போ எப்படியும் இருக்கலாம்.

### நாகரீகத்தின் முடிவு.

நாம் ஏன் எதற்காக உழைத்துப் பாடுபட வேண்டும்? பகுத்தறிவு படைத்த நாம் பாடுபட்டுத்தான் ஆக வேண்டுமா? நாகரீகம் என்பது சதா உழைத்துத்தான் உண்ண வேண்டுமா? என்கின்ற கேள்விகள் எழுந்து மக்கள் சமூகம் கஷ்டம் தியாகமின்றி—நலம் பெற முயற்சிக்கலாம். இது நாகரீகமாகக்கருதப்பட்டு பயன் அடைந்தாலும் அடையலாம்.

இன்றைய அரசியல் விஷயத்தில் இராட்டை சம்பந்தப் பட்டிருக்கிறது. இது ஆயிர வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்டு நாகரீகமாகப் பாவிக்கப்பட்டிருந்தது. பின்பு குப்பையில் தள்ளப் பட்டது. பிறகு மீண்டும் அது வெளிப்படுத்தப்பட்டு, அதற்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுக்கப்பட்டு, இராட்டை சுற்றுவதும்—தக்ளி நூல் நூற்பதும் நாகரீகமாகக் கருதப்பட்டது. ஆனாலும் அதுவும் ஒழிந்து போயிற்று என்றே சொல்லலாம். இவைகளையெல்லாம் எந்தவிதமான (தேசம், மதம், ஜாதி) பற்றுதலுமில்லாத பொது மனிதன், பொது நோக்கோடு கவனித்தால் உண்மை விளங்காமல் போகாது.

நாம் ஒரு காலத்தில் தேசம், தேசீயம்—தேசப்பற்று என்பதை நாகரீகமாகக் கருதி வந்திருக்கிறோம். ஆனால் இன்றோ அவைகளை யெல்லாம் உதறித்தள்ளி, மனித ஜீவகாருண்யம், உலக சகோதரத்துவம், மக்கள் அபிமானம் **(Citizen of the World)** என்று கருதுவதையே பெரிதும் நாகரீகமாகக் கருத முன்வந்து விட்டோம்.

### நாமே நாகரீகமென்றோம், நாமே பரிகசிக்கின்றோம்.

ஒரு காலத்தில் நாகரீகமாகக் கருதி வந்ததை இன்று நாம் பரிகசித்து வருகிறோம். ஒரு மனிதன் தான் நாயக்கன், முதலி, வைணவன், சைவன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப் போராடிக்கொண்டு, ஒவ்வொருவனும் தான் அதிக மேல் சாதிக்காரனாவதற்குச் சைவ வைணவப் போக்கைப்பற்றிக் கொண்டு, பூணூலையும் நாமத்தையும் போட்டுத் தனது மதத்தையும் சிலாகித்துப் பிதற்றிக் கொண்டும் வந்தான். ஆனால் இன்றையத் தினம் இவைகளையெல்லாம் புத்தி கெட்டதனமென்றும், முற்போக்குக்கு முரணானதென்றும் கூறி, வெகுவாகக் கண்டனம் செய்து வருகிறோம். ஒரு காலத்தில் தனித் தனித் தத்துவம் நாகரீகமாகக் கருதப்பட்டது. உதாரணமாக ஒரு தனித்தனி ஜாதி நன்மையும்—தேச நன்மையும் சிலாக்கியமாகக் கருதப்பட்டது. ஆனால் ஒரு ஜாதியின் அனுகூலம் பிற ஜாதியானுக்குப் பாதகம் என்பதையும், ஒரு தேச நன்மை மற்றொரு தேசத்திற்குப்

பொல்லாங்கு என்பதையும், நாம் இன்று நன்கு உணர ஆரம்பித்து விட்டோம்.

### அனுபவம், அறிவு, ஆராய்ச்சியால் முற்போக்கு.

தோழர்களே! நான் குறிப்பாக ஒரு விஷயத்தைப்பற்றி வற்புறுத்தி இங்கு கூற விரும்புகிறேன். அதாவது நாம் அனுபவ முதிர்ச்சியால், அறிவு ஆராய்ச்சியால், நாம் முற்போக்காகிக் கொண்டு வருகிறோம் என்பதேயாம். நாம் எல்லா மனிதர்களையும் அறிவின் உணர்ச்சியால் ஆழ்ந்து கவனிக்கிறோம். உதாரணமாக வியாபாரிகளை—மக்கள் சமூகத்தின் நலனைக் கெடுத்து லாப மடையும் கோஷ்டியைச் சேர்ந்தவர்களென்றும், லேவாதேவிக்காரர்களை—மனித சமூக நாசகர்த்தாக்களென்றும், மத ஆதிக்கங்கொண்ட வர்க்கத்தினர்களை—மனித சமூக விரோதிகளென்றும் கண்டிக்கின்றோம்.

நாகரீகம் என்பது பிடிபடாத ஒரு விஷயமென்று முன்பே கூறினேன். நம்நாட்டுப்பெண்கள் எப்படி 'பெல்ட்' கட்டாமல் சேலை கட்டுகிறார்களென்றும், அது இடுப்பில் எவ்வாறு தங்கியிருக்கிறதென்றும், தலைக்கு ஊசி இல்லாமல் பெண்கள் எவ்வாறு மயிர்களைச் சேர்த்து முடிந்துகொள்ளுகிறார்களென்றும், நாம் சாப்பாட்டுக்கு தினம் ஒரு இலை எப்படிச் செலவு செய்கின்றோம், என்ன மகத்தான நஷ்டமென்றும், மேனாட்டார் ஆச்சரியப்பட்டு நம்மவர்களைக் கேட்பவரையும் கேட்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் அவர்களின் செய்கையைச் சரியாக உணராததினால் சிலவற்றைஆச்சரியமாகக் கருத நேரிடுகிறது.

நம்மிடையேயுள்ள சாதிஅபிமானம், சொந்தக்கார அபிமானம், பாஷா அபிமானம், தேசாபிமானம் எல்லாம் தொலையவேண்டும். இல்லாவிட்டால் எந்த நல்ல விஷயத்திலும் நாம் முடிவு காணுவது சரியாக ஆகிவிடாது.

காந்தியார் மேனாட்டில் முழங்கால் துண்டோடு—போதிய ஆடையின்றிப் போன பெருமையைப்பற்றி ஒரு நண்பர் குறிப்பிட்டார். இது எவ்வளவு தூரம் புத்திசாலித்தனமானதாகும் சவுகரியத்திற்காகவும் — நன்மைக்காகவும் அங்கு அதிக ஆடைகளைப் பந்தோபஸ்துக்காக அணிந்துகொள்ளாமல், பிடிவாதத்தோடு—கேவலம் இந்திய தர்மம் என்ற வெறும் எண்ணத்திற்காக, குளிரில் விரைத்துப்போக இங்கிலாந்து வாசம் செய்தது எவ்வளவு தூரம் நியாயமான செய்கையாகும்?

### பகுத்தறிவுகொண்டு பாடுபட வாரீர்!

புதிய எண்ணங்களும், புதிய எழுச்சிகளும்—புதிய காரியங்களும் நிகழுகின்றன. நீங்களும் காலப்போக்கின் உயரியபலனை வீணாக்காது பகுத்தறிவை மேற்போட்டுக்கொண்டு ஜனசமுதாய நன்மையைத் தேடிப் பாடுபடமுன்வாருங்கள். உங்களுடைய முயற்சிக்கு எல்லாம் வெற்றியே உண்டு. வெறும் கடவுள் நம்பிக்கை கொண்டிருந்தவர்களும்கூட, தங்களுடைய போக்கை மாற்றிக்கொண்டு "முயற்சி மெய்வருத்தக் கூலிதரும்" என்று சொல்லி வருகிறார்கள். ஆகவே தோழர்களே! நீங்கள் தன் நம்பிக்கை கொண்டு—மக்களின் விடுதலைக்குச்சரியான வழிகளிற்பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு போராட வாருங்கள்.

---

## வித்தியாசங்களின் வேர்.

### எனது அனுபவம்.

சிலர் சொல்லுவது போல் கீழே யிருந்து இவ்வித்தியாசங்களைப் போக்கிக் கொண்டுபோக வேண்டுமென்பது ஒரு காலத்திலும் முடியுமபடியான காரியமல்ல. அதற்கு ஆதாரமானதாகிய வேரிலிருந்து பறித்து வெட்டியிருந்தால்தான் மறுபடி முளைக்காமலிருக்கும். அப்படிக்கில்லாமல் அதிலிருந்து முளைத்த கிளைகளை மாத்திரம் வெட்டினால், மறுபடியும் அது நன்றாய்த் துளிர்த்துத் தழைத்துக் கொண்டுதான் இருக்கும். எனவே உற்பத்தி ஸ்தானமாகிய பார்ப்பனர்களிடமிருந்து அதை ஒழிக்க வேண்டும். அவர்களால்தான் இவ்வித்தியாசங்கள் பரவுகின்றன.

உதாரணமாகஎங்கள் வீட்டிற்குமுன் ஒரு குழாய் இருக்கிறது. அதில் தண்ணீர் பிடிக்க ஒரு பார்ப்பனச் சகோதரி வரும்போது ஒரு சுண்டைக்காய் பிரமாணம் புளியும், பஞ்சபாத்திரத்தில் தண்ணீரும் கொண்டு வந்து குழாயைப் புளியால் விளக்கிக் கழுவிப், பின்பு தண்ணீர் பிடித்துக் கொண்டு போக ஆரம்பித்தாள். இதைப் பார்த்த நம் சகோதரிகள் நெல்லிக்காய் அளவு புளியும், ஒரு தோண்டி தண்ணீரும் கொண்டு வந்து புளியால் விளக்கிக் கழுவித் தண்ணீர் எடுத்துக் கொண்டு போகப் பழகினார்கள். இதைக் கண்ணுற்ற நம் முகமதிய சகோதரிகளும் கொளுமிச்சங்காய் அளவு புளியும், முக்கால் குடம் தண்ணீரும் கொண்டு வந்து புளியால் குழாயை விளக்கிக் கழுவித் தண்ணீர் பிடித்து எடுத்துக் கொண்டுபோகப் பழகினார்கள். அந்த முகமதிய சகோதரியை அடுத்து "உங்கள் மதத்திற்கு வித்தியாசமில்லையே; நீங்கள் கூட என் இப்படிக் கழுவித் தண்ணீர் பிடிக்கிறீர்கள்"? என்றால் "எனக்கு என்ன தெரியும்? இப்படித்தான் தண்ணீர் பிடிப்பது வழக்கமோ என்னமோ என்று கருதி நான் செய்து வருகிறேன்" என்கிறாள். இவ்வளவுக்கும் காரணமாயிருந்தவர்கள் யார் என்று பாருங்கள். பார்ப்பனர்கள் இப்படிச் செய்யாதிருந்தால் இவ்வித வழக்கங்கள் பரவ வழியில்லை.

## காங்கரசில் ஜாதி வித்தியாசம்.

### எனது அனுபவம்.

காங்கரஸ் அங்கத்தினரில் ஜாதி வித்தியாசம் பாராட்டப்பட்டதில்லை என்று ஒரு நண்பர் சொன்னார். என்னுடைய சொந்த அனுபோகத்தை இங்கு எடுத்துச் சொல்வதற்கு மன்னிக்கவேண்டுகிறேன். அதாவது நானும் உயர்திரு எஸ். சீனுவாசய்யங்காரும் காங்கரஸ் பிரசார விஷயமாய்த் திண்டுக்கல்லுக்குப் போனபோது ஒரு பார்ப்பனர் வீட்டுக்குப் போயிருந்தோம். அந்தக்காலத்தில் நான் வேறாக வைத்தே சாப்பாடு போடப்பட்டேன். ஆனாலும் பகலில் சாப்பிட்ட எச்சிலை அப்படியே இருக்க, அதன் பக்கத்தில்தான் இரவும் இலை போடப்பட்டுச் சாப்பிட்டேன்.

மற்றொரு சமயம் நானும் தஞ்சை திருவேங்கடசாமிப் பிள்ளையும் காங்கரஸ் பிரசாரமாகப் பெரியகுளத்திற்குப் போனபோதும் ஒரு காங்கரஸ் பார்ப்பனர் வீட்டில் இறக்கப்பட்டோம். அப்போது காலைப் பலகாரம் சாப்பிட்ட எச்சில் இலைக்குப் பக்கத்தில் பகல் சாப்பாடும், பகல் சாப்பாடு, காலைப் பலகாரம், சாப்பிட்ட எச்சில் இலைக்குப் பக்கத்தில் இராத்திரிச் சாப்பாட்டுக்கும் இலை போடப்பட்டு எறும்புகளும், பூச்சிகளும், ஈக்களும் மொய்த்துக்கொண்டிருக்கவே சாப்பிட்டு வந்தோம்.

---

### எனது ஆசை!

மாநாட்டுக்கு தலைமை வகித்த தோழர் அவர்கள் தான் ஒரு சின்னப் பையன் என்றும், தன்னை தலைமைப் பதவியில் உட்கார வைத்து நான் வேடிக்கை செய்கிறேனென்றும் சொன்னார். இந்த இயக்கம் இன்று ஏதாவது மதிக்கத்தகுந்த அளவுக்கு பயன்பட்டு வருகின்றது என்று சொல்லப்படுமானால் அதற்கு காரணம் இந்த மாதிரி "சின்னப் பையன்களே" காரணமாகும். இப்படிப்பட்ட சின்னப்பையன்கள் இந்த இயக்கத்தில் இருப்பதினாலேயேதான் எனக்கு ஒருபுறம் வயது வளர்ந்தாலும் வாலிபமும் கூடவே வளர்ந்து வருகிறது. எனது சகவாசம் முழுவதும் சின்னப் பையன்களிடமே இருப்பதினால்தான் சின்னப்பையன் தன்மை எனக்கு இன்னமும் இருந்தும் வளர்ந்தும் வருகிறது. என் ஆசையெல்லாம் நான் எப்பொழுதும் சின்னப் பையன்கள் மாதிரியே இருக்க வேண்டுமெனபதோடு பெரிய ஆள்கள் மாதிரி ஆகக் கூடாது என்பதுமாகும்.

# இந்தியாவில் பெண்கள்!

★

தோழர்களே! இந்தியப் பெண்கள் நிலைமையைப்பற்றிப் பேசுவதென்றால் அது மிகவும் பரிதாபகரமான விஷயமாகும். அங்குள்ள ஆண், பெண் வித்தியாசமானது முதலாளி தொழிலாளிக்கு உள்ள வித்தியாசத்தைவிட மிகக் கடினமானது. ஒரு தொழிலாளியானவன் எப்படியாவது பணம் சம்பாதித்துக் கொண்டானேயானால், அவன் மெள்ள மெள்ள முதலாளி கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூடியவனாகி விடுவான். ஆனால் இந்தியப் பெண்களோ அப்படியில்லை. அவர்கள் எந்த நிலையிலும் ஆண்களுக்கு அடிமையாகவும், அவர்களுடைய அனுபவப் பொருளாகவும், ஆண்களையே தெய்வமாகக் கருதிப் பூஜித்துத் தொண்டு செய்து கொண்டிருக்க வேண்டியவர்களாகவும் இருப்பார்கள்.

## பெண் பிறவியே பெரிய பாபமாம்.

இந்தியாவில் இந்துப்பெண்கள், இந்துமத சம்பிரதாயப்படி பாப ஜன்மங்களாகக்கருதப்படுவர். அதாவது சென்ற ஜன்மத்தில் அவர்கள் செய்த பாப காரியங்களால், இந்த ஜன்மத்தில் பெண்களாய்ப் பிறக்கிறார்கள் என்பது ஒரு சாஸ்திர விதி. ஒரு குடும்பத்தில் எத்தனை பெண் குழந்தை இருந்தாலும், அக்குடும்பத்திற்கு ஆண் குழந்தை இல்லாவிட்டால், அதைப் பிள்ளையில்லாத குடும்பம் என்றே சொல்லுவது வழக்கம். ஒரு வீட்டில் ஒரு பெண் குழந்தை பிறந்தால், அது அவ்வீட்டுக்கு அதிருப்திகரத்தக்க விஷயமாகவே கருதப்படும். ஆண் குழந்தை பிறந்தால் வெகு திருப்தியுடன் ஆடம்பரச் செலவு செய்வார்கள். ஏதாவது ஒரு சபை அல்லது கூட்டம், யாரும் பேசாமல் நிஸப்தமாய் இருப்பதாய் இருந்தால் அதைப் பார்த்து, "என்ன பெண் பிறந்த வீடு போல் இருக்கிறதே" என்று கேட்பது வழக்கம். எவ்வளவு பெண் குழந்தை இருந்தாலும் ஒருவனுக்கு ஆண் குழந்தை இல்லாவிட்டால், வேறு குடும்பத்தில் இருந்து ஒரு ஆண் பிள்ளையை சுவீகாரம் எடுத்துக் கொள்வார்களே ஒழிய பெண் குழந்தையை வாரிசு குழந்தையாய்க் கருதுவதில்லை.

## பெண் பிறப்பிலேயே விபசாரியாம்.

பெண்கள் எந்த நிலையிலும் சுதந்தரத்திற்கு அருகதை அற்றவர்கள் என்பதே மத சம்பிரதாயம். ஒரு பெண்ணானவள் குழந்தைப் பருவத்தில் தாய் தகப்பன் மேற்பார்வையிலும், வாலிபப்பருவத்தில் புருஷன் மேற்பார்வையிலும், வயோதிகப் பருவத்தில் தன் மக்கள் மேற்பார்வையிலும் இருக்கவேண்டுமே ஒழிய, சுதந்தரமாய் இருக்க விடக்கூடாதென்று மனு தர்ம சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதுமாத்திரமல்லாமல் பெண்களைக் கடவுள், பிறவியிலேயே விபசாரியாய்ப் பிறப்பித்திருப்பதால் அவர்களைச்சர்வ ஜாக்கிரதையாகக் காவல் காக்க வேண்டும் என்றும் மத சாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

## அய்ரோப்பாவில் பெண்கள் கூட்டத்தில் சொற்பொழிவு.

## கல்வி கற்பதே விரோதமாம்.

பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதும் மத சாஸ்திர விரோதமான காரியமாகும். இவ்வளவு நாகரீகமான காலத்திலும் இந்தியாவில் மொத்த ஜனத்தொகையில் 100—க்கு ஒருவர் வீதந்தான் பெண்கள் கல்வி கற்றிருக்கக் கூடும். அப்படிக் கற்றிருந்தாலும் அந்தக் கல்வி அவர்களது வாழ்க்கையில் யாதொரு காரியத்திற்கும் பயன்படுவதில்லை. பெண்களுக்குக் கற்றுக் கொடுப்பதெல்லாம், வீட்டு சமையல் வேலை முதலிய வேலைகளைச் செய்யத்தான் கற்றுக் கொடுப்பது வழக்கம். சிறுபருவ முதலே அவர்களை ஆண் குழந்தைகளிடம் இருந்து பிரித்து வைக்கவேண்டுமென்று கருதுவதால் பொதுப் பள்ளிக்கூடங்களுக்கு அவர்களை அநேகமாய் அனுப்பவே மாட்டார்கள். மற்றபடி சிறு குழந்தைப் பருவத்தில் யாருக்காவது சங்கீதம் பாட்டு முதலியனவு கற்றுக் கொடுக்கப் பட்டாலும் அவை அப்பெண்ணின் வாழ்க்கையில் சிறிதும்பயன்படச்சந்தர்ப்பம் இருப்பதே கிடையாது.

## கலியாணப் பொருத்தம் கடுகளவும் இல்லை.

கலியாண விஷயம் என்பது மிகவும் பரிதாபகரமானது. அநேகமாகப் பெண்களுக்கு 10, 12 வயதிற்குள்ளாக கல்யாணம் ஆகிவிடும். பிறந்த ஒரு வருஷத்திலிருந்தே எப்பொழுது வேண்டுமானாலும் கல்யாணம் செய்யலாம். சில வகுப்புகளில் எப்படியானாலும் 10 வயதிற்குள் கல்யாணம் செய்தாக வேண்டும் என்கின்ற நிர்ப்பந்தம் உண்டு. கல்யாணம் என்பது பெண் கழுத்தில் ஆண் ஒரு கயிற்றைக் கட்டுவதுதான் கல்யாணம். தாலி கட்டுகின்றது என்கின்ற சடங்கு வரையிலும், பெண்ணுக்கு மாப்பிள்ளை இன்னார் என்றே அடையாளம் தெரியாது. மாப்பிள்ளைக்கும் பெண் இன்னார் என்றே அடையாளம் தெரியாது. கல்யாணம் என்பது பெண் மாப்பிள்ளை ஆகியவர்களின் பெற்றோர்கள் செய்து கொள்ளும் ஏற்பாடே ஒழிய, பெண் மாப்பிள்ளை ஆகிய இருவருடைய சம்மதம் என்பது கிடையாது. பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பொருத்தம் என்பது ஜோசியத்தின் மூலமும், சகுனத்தின் மூலமும் பார்ப்பதே தவிர, பிரத்தியட்ச யோக்கியதை முதலியவைகளைக் கொண்டு பார்ப்பதில்லை. 5, 10 வயதுள்ள சிறு பெண்களுக்கு 40, 50 வயதுள்ள மாப்பிள்ளையைக் கல்யாணம் செய்வதும் உண்டு. 10-வயதுப் பையனுக்கு 20வயதுப் பெண்ணைக் கட்டுவதும் உண்டு. 60, 70 வயதுக் கிழவனுக்குச் சிறு பெண்களைக் கல்யாணம் செய்வதும் உண்டு. சென்ற வருஷத்தில் கூட 90 வயது கிழவன் ஒரு சிறு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டான். பெண்ணின் தாய் தகப்பன்மார் யாருக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதானாலும் பெண் சம்மதித்துத்தான் ஆகவேண்டும். பெண் ஏதாவது தனது அதிருப்தியைக் காட்டினால், அது பெண்

ணின் கற்பிற்கே விரோதமானது என்று சொல்லி விடுவதால், பெண் தன்னை யாருக்குக் கொடுக்கப் படுவதானாலும் சம்மதித்தாக வேண்டும்.

**கணவன் வீட்டில், காரிகை நிலை.**

கல்யாணம் செய்யப்பட்ட பெண் புருஷன் வீட்டு வேலைக்கே கல்யாணம் செய்யப்பட்டதாய்க் கருதி புருஷன் வீட்டில் மாமனார், மாமி, நாத்தி, கொழுனன் ஆகிய வர்களுக்கு வேலையாளாக இருந்து சகல வேலையையும் பார்க்கவேண்டும். சில வகுப்புகளில் பெண், புருஷனின் தகப்பன்மாருக்கும், சகோதரர்களுக்கும்கூட பெண்சாதியாய் இருக்கவேண்டும். இதற்குச் சட்டத்திலும் இடமுண்டு. பெண் தாய் வீட்டிலிருந்து புருஷன் வீட்டிற்குப் போகும் பொழுது அழுது கொண்டே போகும். பெற்றோர்கள் பெண்ணுக்குச் சொல்லி அனுப்பும் புத்திமதி யெல்லாம், "புருஷன் வீட்டில் உள்ளவர்களுக்குப் பணிந்து, நல்ல வேலைக்காரியாய் நடந்து கொள்" என்று தான் சொல்லி அனுப்புவார்கள். அந்தப் பெண்ணைப் புருஷன் எவ்வளவு கொடுமையாய் நடத்தினாலும் கேள்வி கிடையாது. சில சமயங்களில் புருஷனுடைய பெற்றோர்கள் கொடுமைப்படுத்தினாலும் கேள்வி கிடையாது. புருஷன் எவ்வளவு அயோக்கியனாகவும், குடிகாரனாகவும், சூது, விபசாரம் செய்பவனாகவும், இருந்தாலும் பெண்ணுக்குக் கேட்க அதிகாரம் கிடையாது.

அவன் வரும்படி இல்லாமல் திரிந்தாலும், பெண் தானே கூலி வேலை செய்தாகிலும் அவனுக்குப் போட வேண்டும். பெண் இவற்றையெல்லாம் தனது முன் ஜன்மத்தின் கர்ம பலனென்று எண்ணிக் கொள்ள வேண்டும்.

**கலியாண ரத்தும் இல்லை.**

புருஷன், மேல் கொண்டு எத்தனை பெண்சாதி வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொண்டு வாழலாம், எத்தனை தாசிகளை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். இந்துமதக் கடவுள்கள் 60 ஆயிரம் பெண்களைக் கட்டிக் கொண்டதாகவும், 12 ஆயிரம் தாசிகள் வைத்திருந்ததாகவும் மத ஆதாரங்கள் உண்டு. எந்த நிலையிலும் கல்யாண ரத்து என்பது கிடையவே கிடையாது. பெண்ணுக்கு ஒரு தடவை கல்யாணம் ஆகிவிட்டால் சாகும்வரை அவனிடமேதான் இருந்தாக வேண்டும். புருஷன் கொடுமை சகியாமல் பெண் தாய் வீட்டுக்குப் போய் விட்டால், புருஷன் கோர்ட்டில் தாவா செய்து டிக்ரி பெற்றுப், பெண்ணைச் சுவாதீனம் செய்து கொள்ளலாம். ஆனால் பெண்ணுக்குப் புருஷனிடமிருந்து ஜீவனாம்சம் பெறத்தான் பாத்தியமுண்டு. அதுவும் பெண் விபசாரி என்று புருஷன் ருஜுப்படுத்திவிட்டால், அந்த ஜீவனாம்சமும் இல்லை.

**சொத்துரிமையும் இல்லை.**

பெண்ணுக்குத்தகப்பன் சொத்தில் சிறிதும் பங்கு கிடையாது. புருஷன் சொத்திலும் பங்கு கிடையாது.

**விதவைக் கோடுமை.**

புருஷன் இறந்து விட்டால் பெண் விதவை என்று அழைக்கப் படுவாள். புருஷன் இறக்கும் போது அவள் எவ்வளவு செல்வத்துடன் மேன்மையாய் இருந்தாலும், கணவன் இறந்தவுடன் இவள் ஒரு அபசகுன உருவமாக ஆகிவிடுவாள். நகை அணியக் கூடாது, புஷ்பம், வாசனை, நல்ல உடுப்பு ஆகியவை அணியக்கூடாது. ஒரே வேளை அதுவும் சத்தற்ற ஆகாரந்தான் சாப்பிட வேண்டும். சில வகுப்புகளில் தலையை மொட்டையடித்து, வெள்ளை உடுப்பு அணிந்து கொண்டு வீட்டிற் குள்ளாகவே வீட்டு வேலைகள் செய்து கொண்டு இருக்க வேண்டும். விதவையைக் காணுவது அபசகுனமாகப் பாவிக்கப்படும். விதவைக்குக் குடும்ப காரியங்களில் அல்லது சடங்குகளில் எவ்வித பாத்தியமும் கிடையாது. சாப்பாட்டுக்கு மாத்திரம்பெறப் பாத்தியமுண்டு. வேறு கல்யாணம் செய்து கொள்ளவும் கூடாது. 5—அல்லது 10—வயதில் புருஷன் இறந்து போனாலும் பெண் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது. ஆனால் புருஷன் தனது பெண்ஜாதி இறந்த 10 நாளிலேயே கல்யாணம் செய்து கொள்ளலாம்.

அவன் எவ்வளவு கிழவனாயிருந்தாலும் மறுமணம் செய்து கொள்வதில் எவ்வித ஆட்சேபனையும் கிடையாது. புருஷன், குழந்தை இல்லா விட்டாலும், ஆண் குழந்தை இல்லாவிட்டாலும் வேறு கல்யாணம் செய்து கொள்ளலாம். பெண் தனது குழந்தைப் பருவத்தில் புருஷன் இறந்து போனாலும் வேறு கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது.

**தனித்தனி வகுப்புகளில், தனித்தனி கோடுமை.**

இவை பொது நிலைமையாகும். இனி சில தனி வகுப்புகளில் உள்ள பெண்கள் நிலைமையைப்பற்றிச் சில குறிப்பிடுகின்றேன். சில வகுப்புகளில் பெண்கள், ஆண்கள் கண்களுக்கே தென்படக்கூடாது. உடம்பு, தலை, முகம் ஆகிய எல்லாவற்றையும் ஒரு துணியினால் போர்த்து மூடிக்கொள்ள வேண்டும். கண்கள் மாத்திரம் தெரியும்படி ஓட்டை விட்டுப் பார்த்துக் கொண்டேபோகவேண்டும். பெண்கள் தனியே எங்கும் போகக் கூடாது. சிறு பெண்ணை, அதாவது 8, 10, 12 வயது பெண்ணை 20, 30, 40 வயதுக்காரர்களுக்குக் கட்டிக் கொடுத்தாலும் கல்யாணமான அன்று இரவே படுக்கை வீட்டில் பெண்ணையும் ஆணையும் தனியாய்ப் படுக்க வைத்து விடுவார்கள். அவன் அதை காமாகாரமாய் எப்படி மிருகத்தனமாய் வேண்டுமானாலும் சில சமயங்களில் நடத்துவான்.

சில வகுப்புகளில், மகனுக்குக் கல்யாணம் செய்த பெண் மாமனாருக்கும் பெண்ஜாதியாய் இருந்தாக வேண்டும். 10 வயதுப் பையனுக்கு 20 வயது பெண்ணைக் கல்யாணம் செய்து, பையன் 18வயது நிரம்புவதற்குள் பெண்ணுக்கு 2, 3 குழந்தைகள் பிறந்து விடும். அது மாமனாருக்கோ அல்லது புருஷனுடைய அண்ணனுக்கோ பிறந்ததாக இருந்தாலும், அக்குழந்தைகள் சட்டப்படி பிறந்த லெஜிட்டிமேட் குழந்தைகளாகவே பாவிக்கப்படும்.

சில வகுப்புகளில் குடும்பத்தலைவன் மாத்திரம் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு, அவனுடைய சகோதரர்கள் உள்பட எல்லாருமே, அப்பெண்ணைப் பெண்ஜாதியாய் அனுபவிப்பதும் உண்டு.

சில வகுப்புகளில் ஒரு குடும்பத்தில் மூத்தவன் மாத்திரம்தான் கல்யாணம் செய்து கொள்ளலாம். மற்ற இளைய சகோதரர்கள் வேறு ஜாதிப் பெண்களை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டிருப்

பெரியார் முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பது வழக்கம். இந்தப்படி வைப் பாட்டியாக வைத்துக் கொண்ட பெண்களுக்குக் குழந்தைகள் பிறந்தால், அவற்றைத் தகப்பன் காப்பாற்ற வேண்டும் என்கின்ற நிபந்தனை இல்லை. தகப்பன் சொத்தில் அவைகளுக்குப் பங்கும் இல்லை.

சில வகுப்புகளில் உயர்ந்த ஜாதிக்காரன் என்கின்ற பிராமணன், மற்ற வகுப்புப்பெண்களைக் கூப்பிட்டால் அவனுக்கு அவள் இணங்கியே ஆக வேண்டும்.

பிராமணன், ஒரு பெண்ணினுடைய புருஷனைக் கூப்பிட்டே அவனுடைய பெண் ஜாதி மீது தனக்கு ஆசையாய் இருப்பதாகவும், அவளை அழைத்து வரும் படியும் கேட்டால் புருஷன் உடனே அழைத்துக் கொண்டு போக வேண்டும். பெண் சம்மதிக்காவிட்டால் நிர்ப்பந்தப்படுத்தி, அல்லது கொடுமைப்படுத்திச் சம்மதிக்கச் செய்வதுமுண்டு. சில வகுப்புகளில் குரு கூப்பிட்டால் இணங்கியே ஆகவேண்டும். முன் குறிப்பிட்ட, அதாவது ஒரு குடும்பத்தில் மூத்தவன் மாத்திரம் கல்யாணம் செய்து கொள்ளலாம்; மற்றவன் வேறு வகுப்பில் வைப்பாட்டி வைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்ட வகுப்பில், பெண்கள் மீதி ஆகி அனேக பெண்கள் சாகும்வரை கல்யாணம் இல்லாமல் கன்னிப் பெண்ணாகவே இருந்து சாவது வழக்கம். இப்படிப்பட்ட பெண்களுக்கு அவர்கள் செத்த பிறகு பிணத்திற்கு ஒருவனைக் கொண்டு தாலி கட்டச் செய்து, பிறகு நெருப்பில் வைத்துக் கொளுத்தி விடுவது வழக்கம்.

சில வகுப்புகளில் கடவுளுக்குப் பெண்ஜாதி ஆகிறது என்று, கோயிலில் வைத்துக் கடவுளைக் கல்யாணம் செய்து கொண்டதாக ஏற்பாடு செய்து, பொது விபசாரியாய் வாழச் செய்வது உண்டு. இவர்களுக்குப் பெயர் தேவதாசி.

ஒரு கல்யாணமான பெண்ணுடன் மற்றொரு ஆண் சம்பந்தம் வைத்துக் கொண்டதாகத் தெரிந்தால், ஆண் சட்டப்படி தண்டனைக்குள்ளாவான். பெண்ணை ஜாதியை விட்டுத் தள்ளி வைத்து விடுவதுமுண்டு.

ஒரு பெண் விபசாரியாய் ஆகி விட்டால், அல்லது தேவதாசியாக இருந்தால், சொத்து வைத்துக் கொண்டு சுதந்தரமாய் இருக்கலாம். இல்லாவிட்டால் சொத்து உரிமை இல்லை, சுதந்தரமும் இல்லை.

இந்து விதவைகள் நிலைமையைப்பற்றிவிளக்கமாயும், அவர்கள் சம்பந்தமான சட்டங்களைப்பற்றியும், விபரமாய் மற்றொரு சமயம் நேரிடும்போது பேசுகிறேன்,

# கலப்பு மணம் — பெருகவேண்டும்.

இத்திருமணத்தில் இதற்கு முன் நடந்த திருமணங்களில் நடந்திராத மாறுதல் விஷயங்கள் ஒன்றும் அதிகமாக நடந்துவிட வில்லையானாலும், இரகசியமாக நடந்தது என்பதும், சர்க்காரில் பதிவு செய்ததும், இக்கூட்டம் கூட்டினதுமல்லாமல் வேறு சடங்கும், அதாவது தாலிகட்டுதல் மாலை மாற்றுதல் முதலியவைகூட இல்லாமல் நடந்தது என்பதுதான். மாப்பிள்ளை தொண்டமண்டல வேளாள சைவ வகுப்பைச் சேர்ந்தவர். பெண் சாதாரண வேளாள அசைவ வகுப்பைச் சேர்ந்தவர். இருவரும் கல்வியில் இரட்டைப் பட்டம் பெற்றவர்கள். சமயயதினர். இதில் நாம் எடுத்துக் கொள்வது ஜாதி, கலப்பு மணம் என்பது தான் என்றாலும் இது ஒன்றும் அதிசயமல்ல. இதற்குமுன் 20, 30 வருஷங்களுக்கு முன்னாலேயே பல இம் மாதிரி நிகழ்ந்திருக்கின்றன.

ஆதலால் அதுவும் முக்கியம் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் இம் மாதிரி ஜாதிக் கலப்பு மணம், இன்னும் சர்வசாதாரணமாக ஆக்கப்படுவதற்கு ஒரு பிரசாரத்திற்காகவே இதை இப்படி விளம்பரப்படுத்துகிறோம்.

உதாரணமாக சரோஜனி அம்மாள் என்கின்ற பார்ப்பனப் பெண்ணுக்கும், கோவிந்தராஜுலு நாயுடு என்கின்றவருக்கும் 1910க்கு முன்பே திருமணமாகியிருக்கிறது. டாக்டர் சுப்பராயன் என்கின்ற வேளாளக் கவுண்டருக்கும், ராதாபாயம்மாள் என்கின்ற பார்ப்பனப் பெண்ணுக்கும் 25 வருடங்களுக்கு முன்பே திருமணமாகி இருக்கிறது.

தேவதாசி வகுப்பு என்பதைச்சேர்ந்த முத்துலட்சுமி அம்மையார் என்கின்ற பெண்ணுக்கும், ரெட்டியார் வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கும் திருமணம் ஆகியிருக்கிறது.

முத்துலட்சுமி அம்மையார் தங்கை நல்லமுத்து அம்மையாருக்கும், டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியார் குமாரரான ஒரு பார்ப்பனருக்கும் திருமணம் நடந்திருக்கிறது.

ஒரு சாயபுக்கும் எண்டோமெண்ட் போர்ட் பிரசிடெண்ட் நாயுடு பெண்ணுக்கும் திருமணம் நடந்திருக்கிறது.

ஒரு அய்யங்கார் பெண்ணுக்கும் ஒரு சாயபுக்கும் திருமணம் நடந்திருக்கிறது.

ஜட்ஜி குமாரசாமி சாஸ்திரியார் குமாரருக்கும், ஒரு அய்ரோப்பிய மாதுக்கும் திருமணம் நடந்திருக்கிறது. ருக்மணி அம்மாள் என்கின்ற ஒரு பார்ப்பனப் பெண்ணுக்கும், அருண்டேல் துரைக்கும் திருமணம் நடந்திருக்கிறது.

தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் (பார்ப்பனர்) பெண்ணுக்கும், காந்தியார் (வாணியர்) மகனுக்கும் திருமணம் நடந்திருக்கிறது.

மற்றும் சில ஆதிதிராவிடப் பெண்ணுக்கும், நெல்லை சைவ வேளாள வகுப்பு ஆண்களுக்கும், திருமணம் எனது வீட்டிலேயே ஒன்றுக்கு மேற்பட்டு நடந்திருக்கிறது. சென்ற மாதத்திலும் ஒரு தேவதாசி வகுப்பு ராஜம் என்னும் பெண்ணுக்கும் சம்மந்தம் என்னும் ஒரு சைவப் பண்டிதர் மகனுக்கும் திருமணம் நடந்தது.

## கலப்புமணம் செய்து கொண்டால் சொத்து இல்லையா?

ஆகவே கலப்பு மணமோ "உயர்வு தாழ்வு" ஜாதி மணமோ இக்காலத்தில் ஒன்றும் அதிசயமல்ல என்பது எனது அபிப்பிராயம். எனக்கு முன் பேசிய பல பெரியார்கள் இப்படிப்பட்ட திருமணங்களுக்கு நானும் சு. ம. இயக்கமும் காரணம் என்பதையும், நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. நாம் செய்வதெல்லாம் இவற்றை விளம்பரம் செய்து மற்றவர்களையும் இதைப்பின்பற்றும்படி செய்ய ஆசைப்படுவதையும் தவிர வேறில்லை.

கலப்புமணம் செய்து கொண்டால் சொத்து இல்லையென்றும், சட்டப்படி செல்லாது என்றும் சொல்வதுகூட சரியல்ல. பார்ப்பனப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டாலோ, அல்லது பார்ப்பன ஆணைக் கலியாணம் செய்து கொண்டாலோ மாத்திரம்தான் செல்லாதாம். அதைத்தவிர மற்றபடி பார்ப்பனரல்லாதார் "இந்துக்கள்" தங்களுக்குள் எந்த ஜாதியில் யாரை மணம் செய்து கொண்டாலும் அது செல்லுபடியாகும். ஆதலால் அதைப் பற்றிய சந்தேகம் இனி யாருக்கும் வேண்டாம்.

இந்து லா என்பதில் பார்ப்பனர்கள் தங்கள் ஜாதி கலந்து போகக்கூடாது என்பதற்கு ஆக, ஏனெனில் தாங்கள் மற்ற ஜாதிகளைவிட உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதற்கு ஆக, தங்களைப் பொறுத்த வரையில் வேறு ஜாதியில் கலியாணம்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கொண்டால் சொத்து பாத்தியமில்லை என்று செய்து கொண்டார்கள். ஆதலால் நமக்கு அதனால் கெடுதல் ஒன்றும் இல்லை.

## பெரியதொரு வெற்றி

நாம் கோருவதெல்லாம் ஒவ்வொருவரும் தாங்கள் தங்கள் வீட்டுத் திருமணங்களை இம்மாதிரி, அதாவது சரியான நல்ல ஜோடி சேர்க்கத்தக்க வண்ணம் நடந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். குமாரராஜா அவர்களும் இதற்கெல்லாம் சு. ம. இயக்கமும், நானும்தான் காரணம் என்றார். அவர் கலப்பு மணத்தைப்பற்றி மாத்திரம் அல்லாமல் செலவு சுருக்கத்தைப்பற்றியும், நாள் சுருக்கத்தைப்பற்றியும் ஆடம்பரம் ஒழிப்புபற்றியும் சொன்னார். அவைகளுக்கு ஆகச் சுயமரியாதை இயக்கம் பாடுபட்டு வருவது உண்மைதான். அதைக் குமாரராஜா அவர்கள் ஒப்புக்கொண்டு ஆதரித்தது நமக்குப் பெரியதொரு வெற்றியாகும்.

ஏனெனில் அவர் பெரிய செல்வவான். செல்வவான்கள் சிக்கனமாகவும், ஆடம்பரமில்லாமலும் நடத்தினால்தான் அது வழிகாட்டியாகும். ஏழைகள் சிக்கனமாக நடத்துவது அதிசயமாகாது. ஆகவே சிக்கனத்தைப் பற்றி நான் பேசுவதைவிட அவர் பேசுவது மிகவும் சிறந்ததாகும்.

வள்ளல் சிவஞான தேசிகர் அவர்கள் நமது முறையைப் போற்றிப்பேசி என்னையும் புகழ்ந்து கூறி இதுதான் பழந்தமிழர் முறை என்று கூறினார். அவர் பெரிய கல்விச் செல்வம் படைத்தவர். அவர் கூறியவைகளுக்கு என்னைப்பற்றிக் கூறியதைத் தவிர மற்றவைகளுக்காக நான் நன்றி செலுத்துகிறேன்.

நான் ஒருவன் இல்லாவிட்டால் தமிழர் உலகமே முழுகிப் போயிருக்குமென்றார். அதற்காக நான் பெருமைப்படவில்லை. அவரது அன்பு அப்படிச் சொல்லச் செய்தது. ஆனால் அவரைப் போலவே என்னைப்பற்றி அதற்கு விரோதமாக அவதூறாகப் பேசுவதையும் கேட்கிறேன். ஆதலால் இரண்டையும் சரிசெய்து விடுகிறேன். அதாவது என்னாலேயே தமிழர் சமுதாயம் மாத்திரமல்லாமல் மனித சமுதாயமே பாழ் ஆகிவிடுகிறதென்றும், மதங்கள், கடவுள்கள் ஒழிகின்றதெனவும் குறை கூறப்படுகின்றன என்றும், இனி சுயமரியாதை இயக்கத்தை ஒழிப்பது தங்கள் கடமையாகக் கொண்டிருப்பதாயும் பலர் சொல்லுவதையும் நான் காதில் கேட்கிறேன்..........

பழந் தமிழர் கொள்கை என்பதைப் பற்றியும், காதல் மணம் என்பதைப் பற்றியும், சுயமரியாதை இயக்கம் பற்றியும் வேண்டுமானால் பேசுகிறேன். ஏனெனில் இவை மூன்றும் இங்கு பேசப் பட்ட விஷயமாகும். மற்றவைகளை வேறு மேடையில் பேசுகின்றேன்.

இம்மாதிரி திருமணங்களில் மற்றும் தமிழர் வாழ்க்கை நடப்புகளில் இனிமேல் பழந் தமிழர் கொள்கை என்பதைப் பற்றி பேசக் கூடாது என்றும், அதை கொண்டு வந்து மேற்கோள் காட்டக் கூடாது என்றும் எனது தோழர்களைச் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பழந் தமிழன் யார்? அவன் கொள்கை என்ன இதற்கு ஆதாரம் என்ன? அதற்கு இன்று அவசியம் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல இன்று ஆளைக் காணோம். வீணாக அந்தப் பெயரின் பேரில் பிழைக்கவோ, பெருமைப்படவோ, மக்களை சுரண்டவோ, தங்கள் எண்ணத்திற்குப் பயன் படுத்திக் கொள்ளவோ பயன் படுத்தப் படுகிறது. பழந் தமிழன் யாராய் இருந்தால் எனக்கு என்ன உங்களுக்குத்தான் என்ன காரியமாகும்? அவன் கொள்கையோ, மதமோ, கடவுளோ, நடப்போ, சக்தியோ எதுவாய் இருந்தால் இங்கு இன்று நமக்கு என்ன லாபம்? என்பதுதான் எனது கேள்வி—பழந்தமிழர் நிலையையும் பற்றி பேசுபவர்கள் பகுத்தறிவு வாதிகளானால், பகுத்தறிவுக்கு மதிப்பு கொடுக்கும் அறிவாளிகளானால், நடுநிலைமைக்காரர்களானால் அவர்களை ஒன்று கேட்கிறேன். அதாவது காட்டுமிராண்டி வாழ்க்கை கால மனிதனை விட, கல் ஆயுதகால வாழ்க்கை மனிதன் சிறந்தவனல்லவா? என்பதும், அதுபோலவே 4000, 5000 வருஷகாலத்திற்கு முன் இருந்த மனிதனைவிட இன்று 20-வது நூற்றாண்டில் வாழும் மனிதன் சிறிதாவது மேலான அனுபவமும், அனுபவமும்பெற சவுகரியமும், ஆராய்ந்து பார்க்கும் வசதியும் உடையவனா அல்லவா என்பதோடு, அந்தக் காலத்தில் வாழ்ந்த வாழ்வைவிட, எண்ணிய எண்ணத்தைவிட வேறான வாழ்வும், வேறான எண்ணங்களும் கொள்ள வேண்டியவனாய் இருக்கின்றானா இல்லையா என்பதுமே யாகும்.

இன்று வாழும் மனிதனுடைய எந்த காரியத்திற்குப் பழந்தமிழனுடைய வாழ்க்கைக் குறிப்பும் நினைவுக் குறிப்பும் நமக்கு வேண்டியிருக்கிறது என்று உங்களை வணக்கமாக கேட்கிறேன்.

## பகுத்தறிவு வாதியின் கடமை.

வீணாகப் பழந்தமிழர் கொள்கை என்பதும், பழந்தமிழர் வாழ்க்கை நிலை என்பதும் அந்நியனை எய்க்கவோ, அறியாமையில் மூழ்கவோதான் பயன்படக் கூடியதாக ஆகிவிட்டது.

இனி நம்முடைய எந்த சீர் திருத்தத்திற்கும் அந்தப் பேச்சு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பகுத்தறிவு வாதியின் கடமையாக ஆகிவிட்டது.

பழந்தமிழன் வந்து போதிக்கத் தகுந்த நிலையில் இன்று நமது மனித சமூகம் இல்லை. பழந்தமிழன் கொள்கை எதுவும் இன்று எந்த மனித சமூகத்திற்கும் அவசியமும் இல்லை. மனிதன் காலத்தோடு மாறுதலோடு செல்ல வேண்டியவனே ஒழிய வேறில்லை. வேண்டுமானால் மடையர்களைத் தட்டி எழுப்ப ஆயுதமாக அதைக் கொள்ளலாம். ஆனால் சாது மக்களை ஏமாற்ற அதைப் பயன்படுத்த விடக் கூடாதென்பததோடு அவ்வளவு மடையர்களும் நம்மில் இல்லை. இன்று நம் பண்டிதர்கள் பலருக்குப் பகுத்தறிவு இல்லாமல் போனதற்குக் காரணமே பழந்தமிழர் வாழ்க்கை, பழங்கொள்கை என்பன போன்ற பழமையேயாகும். பழந்தமிழர் பேச்சுப் பேசி ஆகவேண்டிய காரியம் இனி இல்லை. ஆதலால் பொதுமக்கள் பழந்தமிழர் கொள்கைப் பேச்சு பித்தலாட்டத்திற்கு இடம் கொடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது முக்கிய கடமையாகும். அன்றியும் பழந்தமிழர் கொள்கை என்பது விவகாரத்திற்கு இடமாய் விட்டது.

## காதல் மணம்.

இனி காதல் மணம் என்பதைப்பற்றியும் பேசுவோம். பழங்கால காதல் மணம் இன்று மிருகப்பிராய மணம் என்றே சொல்லவேண்டும். காதல் என்பது மிகமிக சாதாரண அற்ப விஷயம். காதலுக்கு அடிமை ஆவது இன்றைய சமுதாய வாழ்க்கை முறைக்கு சிறிதும் பொருந்தாது. கண்டதும் காதல்கொண்டு காதல் பசி தீர்ந்ததும் சலிப்படைந்து அதன் பயனை பிறகு வேதனையுடன் பொறுத்துக்கொண்டிருப்பதென்றால், அது இன்ப வாழ்க்கையாக இருக்கமுடியாது. உண்மையைப் பேசவேண்டுமானால் யாரைப் பார்த்தால் யாருக்கு காதல் இல்லாமல் இருக்க முடியும்? சமுதாயக் கட்டுப்பாடுகள் பல இருப்பதால் காதல் கொண்டு, காதல் கொண்டு ஏமாற்றமடைவதுமாக வாழ்வு முடிகிறதே ஒழியவேறில்லை. காதலை அவரவர்கள் உள்ளத்திற்கே விட்டுவிடுவோம்.

ஆனால் வாழ்க்கைத் துணை விஷயத்தில் காதல் போதாது. அறிவு, அன்பு, பொருத்தம், அனுபவம் ஆகிய பல காரியங்களே முக்கியமானதாகும். பழங்காலத்தில் காதலே போதுமானதாக இருக்கலாம். அப்போதைய அறிவுக்கு அவ்வளவுதான் தேவையாக இருக்கும். இப்போதைய அறிவுக்குத் திருமணம் வாழ்நாள் முழுவதும் பொருந்தும்படியாக இருக்கவேண்டும். மனித வாழ்வையும் பிறவிக் குணங்களையும் மேன்மைப்படுத்துவதாக இருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட இச்சையின் பெருக்கம் தான் பெரிதும் காதலின் முழு இடத்தையும் பெற்றுவிடுகிறது. மற்ற பல வாழ்க்கை வேறுபாடுகளுக்கு,

ஆராய்ச்சி நூல்க அரக்கட்டளை

அந்த இச்சை பெருக்கம் இருவருக்கும் போதவே போதாது. ஆகையால் அறிவையும், நிகழ்ச்சிப் பயனையும் அலட்சியப்படுத்தும் காதலை மனிதன் அடக்கி வாழ்க்கைத் தனிமையைக் கொண்டு வாழ்க்கைத் துணையைப் பொருத்திக்கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்தாகும். ஆதலாலேயும் பழய தமிழர் மண முறைகளுக்கோ ஆரியர் மண முறைகளுக்கோ இங்கு வேலை கிடையாது. அறிவு, அனுபவம், ஆராய்ச்சி ஆகியவற்றின் மீது ஏற்பட்ட மண முறைகளுக்கே இங்கு வேலை உண்டு. அவை பழையதானாலும், புதியதானாலும் தமிழனுடையதானாலும், ஆரியனுடையதானாலும் அயிரோப்பியனுடையதானாலும் இருந்து போகட்டும்.

## மண முறை.

மண முறைக்கும் பழைமையைத் தேடித்திரிய வேண்டியதில்லை. இன்றுள்ள எந்த மனிதனுடைய அறிவும் அநேகமாய் பழமைக்கு இளைத்ததாய் இருக்காது. இருந்தாலும் நிலைமை தானாக சரிப்படுத்திவிடும். கால நிலைக்கும், சமுதாய நிலைக்கும், அறிவு முதிர்ச்சி நிலைக்கும் ஏற்றபடி தான் முறைகள் வகுக்கப்படவேண்டியவைகளே ஒழிய, ஒரு காலத்து முறைகள் எக்காலத்துக்குமென்றால் மனிதனுக்கு அறிவு வளர்ச்சி இல்லை என்பதுதான் பொருள். அந்தப்படி எந்த மனிதனும் தனது அனுபவத்தையே சொல்ல முடியாது என்று கூறுவேன்.

இதில் பிரத்தியக்ஷ அனுபவத்திற்கும் அறிவுக்கும் மேற்பட்ட காரியம் எதையும் கலக்கக்கூடாது. கலக்குவதானால் அதை எழுதி நெருப்பில் போட்டு அது பொசுங்காமல் இருக்கிறதா என்று பார்த்த பிறகே அறிவை அடக்கவேண்டும். இந்த நிலையில் ஏதோ சிலர் தாங்கள் தான் அறிவாளிகள், மற்றவர்கள் அறிவிலிகள் என்று நினைப்பதும் கற்றறி மூடர்கள் குணங்களேயாகும்.

## சு. ம. இயக்கம்

இனி அடுத்தாற்போல் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி இங்கு பேசப்பட்டது. அதைப் புகழ்ந்து பேசியதற்கு நான் நன்றி செலுத்துகிறேன், பெருமையும் அடைகிறேன். ஆனால் சுயமரியாதை இயக்கத்தைக் குறை கூறுகிறவர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் அறியாமலும் இல்லை; அதை மறைக்கவுமில்லை.

சுயமரியாதை இயக்க விஷயமாய் என்மீது சில குறைகள் கூறலாம். என்னவெனில் நான் அதைச் சரியாய்க் கவனிக்கவில்லை என்று. அதில் சிறிது உண்மை இருக்கலாம். ஆனாலும் அதற்குச் சமாதானம் இல்லாமல் இல்லை. நான் எவ்வளவு வேலைகளைப் பார்ப்பது? நான் எவ்வளவு தொல்லைகளை மேலே போட்டுக்கொண்டிருக்கிறேன், எதிரிகளும், பொறாமைக்காரர்களும் எவ்வளவு வளர்ந்து கொண்டு வருகிறார்கள். நமது மக்கள் எவ்வளவு சுலபமாக ஏமாற்றப்படுகிறார்கள். சுயநலக்காரர்கள் தொல்லை எவ்வளவு? என் சொந்த நிலைமை என்ன? எனக்கு இயற்கையில் உள்ள பலவீனங்கள் எவ்வளவு? இவ்வளவு உள்ள ஒரு மனிதன், அதிலும் தான் மேற்கொண்ட வேலை எதற்கும் தானே எஜமானன் என்கின்ற ஆணவமும் கொண்டு, சகல பொறுப்புகளையும் சுமக்கிற பயித்தியக்காரனான நான் எதைப்பார்ப்பது, எதை விடுவது என்பது எனக்கே புரியவில்லை. இந்த நிலையில் சு. ம. இயக்கம் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்றாலும் ஒரு காரியத்தில் நான் மிகக் கவனிப்போடு இருக்கிறேன். அதாவது சுயமரியாதை இயக்க சம்பந்தமாக எந்தக் கொள்கையையும் நான் விட்டுக் கொடுக்கவில்லை. அதை எந்த விதமான ராஜிக்கும் உட்படுத்தவில்லை. கூடுமானால் மற்றவர்கள் மீது வலுக்கட்டாயமாய் சுமத்தாமல் இருந்திருப்பேனே ஒழிய நான் மாற்றிக் கொள்ளவில்லை என்பதையும், நான் சற்று கவனக்குறைவாய் இருந்து விட்டதால் ஒன்றும் முழுகிப்போகவில்லை என்பதையும், நான் சும்மா இருந்தாலும் அதன் எதிரிகள் முயற்சியில் அது வளர்ச்சியும் விழிப்பும் பெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## தன் மதிப்பியக்கத்தின் முக்கியத்துவம்.

சு. ம. இயக்கத்திற்கு சமயம் சமுதாயம், பொருளாதாரம். அரசியல், கல்வி, ஆராய்ச்சி ஆகிய துறைகளில் அறிவைச் செலுத்தி மனிதத் தன்மைக்கு ஏற்ற வாழ்க்கைத் திட்டத்தை நிறுவச் செய்வதே முக்கியத்துவமாகும்.

10, 15 வருஷங்களுக்கு முன்பாகவே பெரியார் எஸ். முத்தையா முதலியார், குமார ராஜா போன்றவர்கள் ஆதரவை பெற்று தொண்டாற்றியிருக்கிறது. முத்தையா முதலியார் அவர்கள் சுயமரியாதை இயக்கக்காரர் என்கின்ற பெயரால் செய்யவில்லையானாலும் தமிழர் சுயமரியாதைக்கு ஆக, அவர் அரசியல் ஆதிக்கத்தில் இருக்கும் போது பல காரியங்கள் செய்திருக்கின்றார்கள். அதற்கு ஆக தமிழர்கள் வீட்டிற்கு ஒரு குழந்தைக்கு முத்தய்யா என்று பெயர் வைக்க வேண்டும். இன்று மாத்திரம் நம்மியக்கத்தையும் [illegible]த்தத்தையும் அவர் புகழ்ந்து பேசிவிட வில்லை. அநேக சு. ம. மகாநாட்டைத் திறந்து வைத்து இருக்கிறார். மற்றவர்களைப் போல அவர் பாமர ஜனங்கள் என்ன சொல்லுவார்களோ என்று பயப்படுபவரல்ல. அதுபோலவே வள்ளல் சிவஞான தேசிகர் அவர்களும் 12 வருஷமாக நம்மை ஆதரித்து வருகிறார். இங்கு என்னைப் புகழ்ந்து பேசினாலும் குற்றம் கண்டவிடத்து தைரியமாய் திருத்தி இருக்கிறார்.

சு. ம. இயக்கத்தில் பல தோழர்கள் இருக்கிறார்கள் என்று பேசப்பட்டது. அப்படிப்பட்ட தோழர்கள் சிலராவது நிலைமை மாறாமல், உறுதியோடு தங்கள் நலத்தை விட்டுக்கொடுத்தும் போராடுகிறவர்கள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களாலேயே தான் எனக்கு உறுதியும், ஊக்கமும் வளருகிறது. அவர்களுக்கு எனது உபதேசமெல்லாம் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதேயாகும்.

## சேவை.

சேவை என்பது கூலியை உத்தேசித்தோ, தனது சுயநலத்தை உத்தேசித்தோ, செய்வதல்ல. மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்கு ஆகவே செய்யப்படும் காரியம்தான் சேவையாகும்.

ரஷ்யாவில் மதம் இல்லை, கடவுள் இல்லை என்று சொல்லுவார்கள். ஆனால் அங்கு ஒருவன் மற்றவர்களைக் கடவுளாகக் கருதுகிறான். அவர்களுக்குத் தொண்டாற்றுவதை மதமாகக் கருதுகிறான்.

ரஷ்யாவில் சொத்தெல்லாம் பொதுச்சொத்து. உழைப்பெல்லாம் பொது நல சேவை என்று இருந்தாலும், தொண்டாற்றுவதன் மூலம் வாழ்வுக்குப் பயன் அனுபவிப்பதால் அப்படிப்பட்ட தொண்டை அவன் பொதுத் தொண்டு என்று கருதுவதில்லை.

அந்த நேரம் போக, அதாவது ஊதியத்திற்காக வேலை செய்யும் நேரம் போக இவன் இஷ்டப்படி அனுபவித்துக் கொள்ள, இவனுக்குச் சுதந்தரமாய் இருக்கும் நேரத்தில் எவ்வளவு நேரத்தை எந்தக் காரியத்திற்கு ஊதியமில்லாமல் செலவழிக்கிறானோ, அதற்குத்தான் பொதுநல சேவை என்று பெயர். இப்படியே ரஷ்யாவில் உள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் இம்மாதிரி ஒரு பொதுநல சேவை, தொண்டு இருக்கும். அதற்கு ஒரு அடையாளமும் உண்டு. அதுபோல் சு. ம. இயக்கக்காரன் யார் எந்த வேலை செய்து எவ்வளவு ஊதியம் சம்பாதித்து எவ்வளவு செலவு செய்தாலும். பொதுநல சேவைக்கு ஒரு காலத்தை ஒதுக்கி வைத்து வேலை செய்யவேண்டியது முக்கியக் காரியமாகும். அதில் மற்றவர்கள் விருப்பு வெறுப்பைப் பார்க்காமல் நற்பயனைக் கருதி அதற்கு ஏற்ற தொண்டாற்ற வேண்டும்.

மற்றபடி சு. ம. இயக்கத்திற்கு அது வுண்டா? இது உண்டா என்பதைப் பற்றி நமக்குக் கவலை வேண்டாம். அதற்கு அறிவு உண்டு; அந்த அறிவு மானத்தைக் காப்பாற்றப் பயன் படுத்தப்படவேண்டும் என்று சுருக்கமாக முடித்துக்கொள்ளுவோம்.

# மொழி ஆராய்ச்சி.

★

தமிழரசு, தமிழ்நாடு, தமிழ் மொழி என்று கூப்பாடு போடுகின்றார்களே! நாமென்ன தமிழுக்கு விரோதிகளா! தமிழ் வேண்டாமென்கிறோமா? தமிழ் மிலேச்சமொழி என்று கூறுகிறோமா? அன்று தமிழ்மொழியைக் கொல்ல கொடிபிடித்து, ஹிந்தியை ஆதரித்து நமக்கெதிராகக் கொடிதாங்கித் திரிந்த தோழர்கள்தானே இன்று தமிழ், தமிழ் என்று கூப்பாடு போடுகின்றனர். இவர்கள் ஆரியத்திற்குச் சோரம்போயிருந்த அந்தக்காலத்திலும் கூட நாங்கள்தானே தமிழ் வளர்க்கப் பாடுபட்டோம். இதை யாராவது மறுத்துக்கூற முடியுமா?

### பொறுப்புள்ள புலவர் போட்டி யிடட்டுமே.

நானும் ஒரு தமிழன்தானே. நான் பேசுவது கன்னடம் என்று சிலர் கூறலாம். நான் பேசும் மொழியை ஒருவன் கன்னடம் என்று கூறினால் அவன் தமிழ் அறியாதவன் என்றுதான் நான் கூறுவேன். தகுந்த பொறுப்புள்ள தன்மானமுள்ள எந்தப் பண்டிதர் வேண்டுமானாலும் முன்வரட்டும். என் சக்திக்கு ஏற்ற அளவுக்கு நான் பந்தயம் கட்டுகிறேன். அவர் மறுத்துக் கூறட்டுமே நான் பேசுவது தமிழல்ல, கன்னடம் என்று. நான் பேசும் மொழி தமிழ்தான். தமிழறியாததால் நீதான் அதைக் கன்னடம் என்று கூறுகிறாய். இதேபோல் தெலுங்கன் பேசுவதும் தமிழ்தான். அதைத்தான் தமிழ் தெரியாததால் நீ தெலுங்கென்று கூறுகிறாய். மலையாளி பேசுவதும் தமிழ்தான். நீதான் அதைத் தமிழ் தெரியாததால் மலையாளம் என்று கருதுகிறாய், என்று நான் கூறுகிறேன்.

### தமிழ் தெலுங்குகளை வேறு என்போன் தமிழனே யல்ல.

தமிழன், தெலுங்கன், கன்னடியன், மலையாளி இவர்கள் பேசுவதெல்லாம் தமிழ்தான். இவர்கள் பேசுவது வெவ்வேறு மொழியென்று கூறுபவன் தமிழ் மகனல்ல. ஆரியத்திற்குச் சோரம் போனவன்; நம்மைக் காட்டிக்கொடுத்து ஆரிய ஆதிக்கத்துக்கு ஆக்கம் தேட முயற்சிப்பவன். தமிழர் என்று தம்மை இவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறலாமே தவிர, இவர்களைத் தமிழ் அறிந்தவர்கள்என்று நாம் ஒப்புக்கொள்ள முடியாது. திராவிட மொழி எது என்று கேட்கப்படுகிறது. திராவிட மொழி தமிழ் தவிர வேறு இருக்க முடியாது. ஆரியருக்கும் வடமொழி தவிர, வேறுமொழி பிடிக்கவும் செய்யாது. தமிழை நாம் பராமரிக்க மறந்துவிட்டோம். அதை நாம் லட்சியப்படுத்தாமல் கூடுமளவுக்கு அலட்சியப்படுத்தி விட்டோம். நமது பண்டிதர்களெல்லாம் தமிழ் வல்லவர் என்று தம்மைக் கூறிக்கொண்டு, தம்மால் முடியுமளவுக்குத் தமிழை ஒழிக்க எதிரிக்கு கையாளாயிருந்தார்களே ஒழிய, தமிழை வளர்த்தார்களில்லை. தமிழுக்கு எமனாக அன்று தொட்டு இருந்து வருபவர்கள் இந்தப்பண்டிதர்கள் தான். நாட்டுப் பற்று, மொழிப்பற்று என்று கூறி பயனற்ற சில கூட்டத்தார் எதைச்சொன்னால் பாமரர்கள் ஏமாறுவார்களோ, அதைக் கூறி நம் முயற்சியைக் கெடுக்கிறார்களே ஒழிய, உண்மையாகத் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் பாடுபடுபவர் திராவிடக் கழகத்தார் தான். நாங்கள் திராவிடநாடு, திராவிடமொழி என்று கூறும்போது மொழி போச்சு, மொழி போச்சு என்று கூப்பாடுபோடும் தோழனே! எங்கள் முயற்சியால் எது போகும்; உன் அறியாமை வேண்டுமானால் போகுமே ஒழிய, உண்மையில் தமிழுக்கோ தமிழ் நாட்டிற்கோ கடுகளவேனும் கேடு வருமா? நமது அரசாங்கத்தாருக்கு இன்று ஏற்பட்டுவிட்ட மொழிப்பற்று, நம் மொழியைக் கெடுக்க, கொலை செய்ய ஆரம்பித்து விட்டது கண்டு குலைநடுக்க மெடுக்கிறது.

### தமிழைக் கெடுக்கப் புது முயற்சி.

மொழிவாரி மாகாணம் பிரிக்கப்படப் போகிறது. அதுதான் பிரிந்து போகட்டும் என்றால், மொழிவாரி வித்வான்கள் நியமிக்கப்பட்டு, மொழிவாரி இலக்கணங்களும் செய்யப்பட்டு, திராவிட மொழியைப் பாழாக்கத் திட்டம் தீட்டியாகி விட்டதே! இந் நான்கு மொழிகளும் ஒரே மொழிதான் என்ற கருத்து மக்களிடையே செல்வாக்குப் பெற ஆரம்பித்ததும் ஆரிய ஆதிக்கம் அதைக் கெடுக்க, அவை ஒன்றல்ல தனித் தனி என்று பிரித்துக்காட்ட முற்பட்டுவிட்டதே. நம்மைக் காட்டிக்கொடுக்கும்பண்புவாய்ந்ததமிழ் மந்திரியும் தம்போன்ற விபீஷணர்களையே ஆஸ்தான வித்வான்களாக்க முயன்று வருகிறார். அவர்கள் இனி தம்மால் ஆனமட்டும் கேடு செய்வார்கள்.

### ஒன்றே நான்காகி உள்ளது.

பண்டிதர்களில் சிலர் இவை நான்கும் ஒன்றிலிருந்து வந்தவை, ஒரே தாய் வயிற்றில் பிறந்து வளர்ந்த நான்குஅக்கா,தங்கைகள் என்று கருதுகிறார்கள். இது பித்தலாட்டம் என்பதுதான் என் கருத்து. இத் திராவிடத் தாய்க்குப் பிறந்தது ஒரே மகள் தான். அது தமிழ்தான். அந்த ஒன்றைத்தான் நாம் நாலு பேரிட்டு அழைக்கிறோம். நாலு இடத்தில் பேசப்படுவதால் நான்கு பெயரில் வழங்குகிறதே ஒழிய நாலிடத்திலும் பேசப்படுவது தமிழ் ஒன்றுதான். நாலும் ஒன்றிலிருந்து உண்டானவை என்று எண்ணுவதுதான் தவறு. ஒன்றுதான் நாலாக நமது அறியாமையால் கருதப்பட்டு வருகிறது. இதை நிரூபித்துக் காட்ட என்னால் முடியும்.

### ஒரே மக்கள் பலஜாதி, ஒரே மொழி பல மொழி.

நாலு தனி இடங்களில் வசித்து வந்த மக்கள் போக்குவரவுத் தொடர்பு இல்லாததால் அந்தந்த சீதோஷ்ண நிலைக்கேற்ப இயற்கையாகவே அவர்கள் பேசிய வார்த்தைகளில் சில சப்த மாறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. இதைச் சாதகமாக வைத்துக்கொண்டு நம்மை நாலு ஜாதியாகப் பிரித்து வைத்த ஆரியம், நம் மொழியையும்

நான்காகப் பிரித்து, வேண்டுமளவும் வடமொழியை அவற்றிற்குள் புகுத்தி, திராவிட மொழியையே கெடுத்து விட்டது. அன்றையப் பண்டிதர்கள் ஆரியத்திற்கு அடிமைப்பட்டிருந்ததால் அதைத் தடுத்தார்களில்லை. இன்னும்நமது பண்டிதர்களுக்கு அந்த ஆரிய மோகம் தீர்ந்தபாடில்லை.

### நான்கு புலவர்களும் கூடட்டும்.

ஆரிய மோகம் அற்ற ஒரு தெலுங்குப் பண்டிதர், ஒரு கன்னடியப் பண்டிதர், ஒரு மலையாளப் பண்டிதர், ஒரு தமிழ்ப் பண்டிதர் ஆகிய நால்வர் ஒன்றாக உட்கார்ந்து, நாலு அகராதிகளை வைத்துக்கொண்டு அவற்றிலுள்ள வடமொழி அத்தனையையும் நீக்கி விடுவார்களானால், எஞ்சியிருப்பவை அத்தனையும் தமிழ் வார்த்தைகளாகவே இருப்பதைக் காண்பார்கள். 100க்கு 5வார்த்தைகூட தமிழ் அல்லாத வார்த்தையாக இருக்காது. அதற்குள்ள சற்று நீட்டலையோ, குறுக்கலையோ எடுத்துவிட்டுப் பார்த்தால் அவையும் தமிழாகவே முடியும்.

### ஏன் நீங்களே பாருங்கள்.

இன்று வேண்டுமானால் நீங்கள் உங்கள் வீட்டுக்குப்போய்50 -வருடத்திற்கு முந்திப் பதிப்பிக்கப்பட்ட ஒரு மொழிவாரி சொற்கள் புத்தகத்தை (**Vocabulary**) எடுத்துப்பாருங்கள். இந் நான்கு மொழிவாரிச் சொற்கள் யாவும், பெரும்பாலும் தமிழாகவே இருப்பதைக் காணலாம். இதைச் சுருக்கமாகச் சில ● உதாரணங்களால் விளக்குகிறேன்.

நாம் வசிக்கும்இடத்திற்குத்தமிழில் 'வீடு' என்கிறோம். நமது தாகத்தைத் தணித்துக்கொள்ள உபயோகிக்கும்பானத்தைத் 'தண்ணீர்' என்று கூறுகிறோம். அவற்றை ஒரு தெலுங்கன் 'இல்' என்றும், 'நீளு' என்றும் சொல்கிறான். அதையே கன்னடியனொருவன் 'மனை' என்றும், 'நீரு' என்றும் சொல்கிறான். ஒரு மலையாளி அவற்றை 'பொறை' என்றும், 'வெள்ளம்' என்றும் சொல்கிறான். வீடு, இல், மனை, பொறை இவை நான்கும் தமிழ்ச் சொற்கள் தானே. நீர், நீளு, வெள்ளம் இவை தமிழ்தானே. நாம், 'எனக்கு' என்று தமிழில் கூறுவதைத் தெலுங்கன் 'நாக்கு' என்றும், கன்னடியன் 'நெனக்கி' என்றும் கூறுவான். பாப்பான் 'நேக்கு' என்று கூறுவான். அகத்திற்கு என்பதை 'ஆத்துக்கு' என்று திருத்திக் கூறுவான். அவர்கள், இவர்கள் என்று கூறவேண்டியதை, அவா, இவா என்கின்றான். இந்த நேக்கையும், ஆத்தையும், அவாள், இவாளையும் தமிழ் என்று கூறும்போது, இல், மனை, பொறை என்றும், நீளு, வெள்ளம் என்றும், நாக்கு, நெனக்கி, எனக்கி என்றும் கூறும் மக்களைத்தானா வேறுமொழி பேசுபவர்கள் என்று ஒதுக்கவேண்டும்? இந்தப் பார்ப்பனரை எல்லாம் ஒரு தனி இடத்தில் வைத்துவிட்டால், இவர்கள் பேசுவதும் வேறொரு மொழியாகத்தானே போய்விடும்?

### உண்மைப்பற்று வேண்டும்!

ஆகவேதான் நான் கூறுகிறேன். இவை நான்கும் நாலு இடத்தில் நாலு பெயருடன் வழங்கப்பட்டு வரும் ஒரே மொழியே தவிர நான்கல்ல. ஆரியம்தான் இவற்றை நான்காகப் பிரித்து வைத்துள்ளது. இவ்வாரியத்திற்குக் கையாளாக இருப்பவர்கள் தான் தம் அறியாமையால் இப் பிரிவினைக்கு ஆக்கம் விளைவிக்கிறார்களே ஒழிய, உண்மையில் இவை நான்கும் ஒன்றுதான். சுயநலம் மறந்து உண்மை மொழிப் பற்றுக்கொண்டு ஆரிய வடசொற்களை நீக்கிப் பார்த்தால் இவை நான்கும் ஒரே மொழிதான் என்பது தீர்க்கமாய் விளங்கும். இதை நமது தோழர்களுக்கு உணர்த்தி, ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மக்கள் என்ற ஒன்றுபட்ட நிலையை உண்டாக்கத்தான் நாம் உழைக்க வேண்டும்.

### பிளவுசெய்த ஆரியமே, இன்றும் பிளவு செய்கிறது.

நாமத்தை இரண்டு தினுசாகப் போட்டு, வடகலை தென்கலை என்று கூறி வைணவர்களைப் பிரித்து வைத்தது போல், நம்மக்களிடையே புழக்கத்திலிருந்துவரும் சில சப்த வேறுபாடுகளை ஆதாரமாகக் கொண்டு நம்மைப் பிரித்து வைத்த ஆரியம், நம்முடைய அப்பிரிவினை ஒழிப்பு முயற்சியைக் கண்டு பயந்து பிரிவினைக்கு ஆக்கம் தேட மொழிவாரி இலக்கணங்கள் செய்யத் திட்டம் தீட்டியுள்ளது. பிரிவினை என்று கூறிக் கொண்டே போனால் எதுவும் பிரிந்துதான் போகும். நாம் அங்கே என்பதை ஒருவன் 'அக்கடே' என்றும் ஒருவன் 'அவடே' என்றும் கூறுகிறான். இச்சிறு வேறுபாட்டின் காரணமாக இவை வெவ்வேறு மொழியாக்கப்படலாமா? நமது பண்டிதர்கள் தமிழைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. பார்ப்பனனிடம் சபாஷ் பட்டம் வாங்கவேண்டித்தம்மால் கூடுமான அளவுக்கு வடமொழியைத் தமது நூல்களில் புகுத்தித் தமிழைக் கெடுத்தனர். ஆரிய மத ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்ட அப்பண்டிதர்கள் தாராளமாக ஆரியச் சொற்களைக் கடன் வாங்கி மத நூல்களில் புகுத்தினர். உண்மையில் தமிழன் முன்னேற்றத்தைத் தடை இப்பண்டிதர்களும் இவர்களின் மதப்பற்றும்தான்.

### என்னருந் தமிழே! நீயே தெலுங்கு, நீயே கன்னடம்.

நாம் பசு என்பதைத்தான் தெலுங்கன் 'ஆவு' என்றும், கன்னடியன் 'அசு' என்றும், மலையாளி 'ஆவ்' என்றும் கூறுகிறான். ஆ, என்றால் தமிழில் பசுவைத் தானே குறிக்கும்? இச்சிறு வித்தியாசத்திலா இவை நான்காகப் பட வேண்டும்? இவை நான்கும் ஒரு உதிரத்திலிருந்து உதித்தெழுந்ததல்ல. அந்த உதிரமேதான் இவை நான்கும். என்னருந் தமிழே? நீயேதான் தெலுங்கு, நீயேதான் மலையாளம், நீயேதான் கன்னடம் என்றுதான் நான் கூறுவேன். இவை வெவ்வேறு மொழிகளாயிருந்தால் இவைகளுக்கு முதல் நூல்கள் எங்கே? தமிழுக்குத்தான் முதல் நூல்கள் எத்தனையுள்ளன? அத்தனையும் ஆடிப்பெருக்கத்தில் ஒழித்த ஆரியக் கூட்டமும் அவர்களின் அடிவருடிகளும்தானே இன்று தமிழ், தமிழ் என்று கூப்பாடு போடுகிறார்கள்? இந்த அன்னக்காவடி சர்க்காரே, 'இந்தப்பாடம் கூடாது', சீர்திருத்தம் பேசக்கூடாது, ஆரியர், திராவிடர் என்று எழுதக்கூடாது, என்றெல்லாம் உத்தரவிடுகிறதே! இந்த 1947ல் இதே இவ்வளவு செய்யுமானால் அன்றைய அரசாங்கத்தில் என்னதான் கேடு நடந்திருக்க முடியாது? அதைப்பற்றியெல்லாம் ரொம்ப சல்லீசாக மறந்துவிட்டுப், பார்ப்பானுக்கு அடிமையாகி அந்த அடிமை மோகத்தில் மூழ்கி, என்னை எனப்பா மொழிப்பற்றற்றவன் என்று ஏசுகிறாய்?

[6ம் பக்கத் தொடர்ச்சி]

டைய ஆதிக்கமாய் இருந்தாலும் வகுப்பு கலவரம், வகுப்பு குழப்பங்கள் பிரிட்டிஷ் இந்தியாவில் இருப்பதில் 10-ல் ஒரு பங்குகூட இல்லாமல் இருந்து வருகிறது. எந்த வகையில் பிரிக்கப்பட்ட இந்தியா இன்று கஷ்டப்படுகிறது என்றாவது பிணைக்கப்பட்ட இந்தியா சுகப்படுகிறது என்றாவது சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.

### நம்மைத் துரத்துகிறான் நாம் துரத்த வழியில்லை.

சிலோன், பர்மாக்காரர்கள் பிரிந்ததால் தங்கள் நாட்டைச் சுரண்டுகிற அன்னிய நாட்டு மக்களை "வெளியில் போ" என்றுசட்டம்செய்யவும், சிலோனியன்தான் அதிகாரியாக இருக்கலாம் என்று சட்டம் செய்யவும், இந்தியக் கூலிகளைக்கூட விரட்டவும் முடிந்தது. ஆனால் நாம் பிணைந்து இருப்பதால் திராவிட நாட்டின் ஆதிக்கம் அதிகாரம் பூராவும் ஆரியனிடமே இருக்கிறது. வெளி மாகாணத்தில் இருந்து வந்து கொள்ளையடிப்பவனையும், சுரண்டுகிறவனையும், சகலதொழிலையும் கைவசப்படுத்திக்கொண்டு நம் நாட்டு மக்களை வேறு நாட்டிற்கு கூலியாகத் துரத்துகிறவனையும் கூட, துரத்துவதற்கு நமக்கு இன்று அதிகாரமில்லை.

### கொள்ளையடிக்கும் கும்பலுக்குக் கூட்டாளிகள்.

இந்நாட்டில் முல்தானி, மார்வாடி, குஜராத்தி எதற்காக வந்து கொள்ளை அடித்துப் போவது? பார்ப்பனர்களாவது தொலைந்து போகட்டும் என்றாலும், இந்த முல்த்தானிக் கூட்டங்கள் சுரண்டுவதற்கு என் இடம் கொடுக்க வேண்டும்? இவர்களைப் பார்ப்பனர்கள் தானே அழைத்து வந்து சுரண்டிக் கொண்டு போவதற்கு இடம்கொடுத்து, அவர்களிடம் கூலிவாங்கி நம்மை ஒழிக்கும் இயக்கத்தை நடத்துகிறார்கள்.

---

### எப்பொழுது பிறந்தது இவை ?

மலையாளம், கன்னடம் தெலுங்கு இவை வேறு மொழிகள் என்று கூறுகிறாயே! உனக்கு எது தெலுங்கு, எது தமிழ் என்பதாவது தெரியுமா? தெலுங்கு என்று தோன்றியது என்பதை நீ அறிவாயா? தெலுங்கு தனி மொழி என்று கூற உனக்கு ஆதாரம் ஏதாவது இருக்கிறதா? தெலுங்கு நேற்றுத் தோன்றியமொழி. மலையாளம் இன்று காலை தோன்றிய மொழி. அதாவது இவை இரண்டும் ஆரிய நச்சு நம்மிடை புகுந்து அரிக்க ஆரம்பித்த பிறகு சமீப காலத்தில் தோன்றியவைதானே!

காங்கரசுக்குப் பிறகு தானே இவர்களுக்கு இங்கு இவ்வளவு ஆதிக்கமேற்பட்டது?

### இந்து மதம், இந்தி பரவ இவர்களுக்கேனோ அக்கரை?

ஹிந்து மகாசபை மகாநாடு நடத்த ஈரோடு முல்தானி சேட்டுகள் 500 ரூ. கொடுத்தார்களாம். சேலம் முல்த்தானியும், குஜராத்தியும் 500 ரூபாய் கொடுத்தார்களாம். இதன் கருத்து என்ன? அவர்களுக்கு மாத்திரம் இந்து மத பக்தி அவ்வளவு ஏன் வரவேண்டும்?

இந்தியை இந்நாட்டில் பரப்ப முல்தானி, குஜராத்தி, மார்வாடிகள் தான் லக்ஷக்கணக்காகக் கொடுக்கிறார்கள். சென்னை இந்தி மண்டலத்திற்கு வருஷம் 20, 30, ஆயிரம் ரூ. போல் பார்ப்பனர் செலவு செய்கிறார்கள். கட்டடங்கள் லக்ஷக் கணக்கில் செலவு செய்து கட்டப்படுகிறது. அங்கு உள்ள பார்ப்பனர்கள் வாழ்க்கை அரவிந்த ஆச்சிரமம் போலவும், ராமகிருஷ்ண மடம் போலவும், ரமண ரிஷிகள் ஆச்சிரமம் போலவும் நடைபெறுகின்றன. ஒழுக்கங்களில் என்றாலோ படிக்க வரும் பெண்கள் இந்திப்படிப்புப் பெற்றுப்போவது மாத்திரமல்லாமல் பிள்ளைகளையும் பெற்றுக்கொண்டு போகிறார்கள். இப்படியெல்லாம் நடக்கும் இதற்கு யார் பணம் கொடுக்கிறார்கள். குஜராத்தி, மார்வாடி, முல்தானியல்லவா? வருஷம் ஒன்றுக்கு இந்தக் கூட்டத்தாரால் திராவிட நாட்டில் இருந்து பகல் கொள்ளைபோல் அடித்துக் கொண்டு போகும் பணம் எத்தனை கோடி என்று கணக்குப்போடுங்கள்.

### இவனும் போகிறான், அவனும் வருகிறான் ஆனால்?

திராவிடன் பம்பாய்க்குக் கூலியாகப் போய் தோல் ஷாப்பில் மயிர் கழிக்கும் வேலையில், நாற்றத்தில்கொசுக்களுக்கு ஆகாரம் கொடுத்துக்கொண்டு ஓட்டைக் குடிசையில் தீண்டாத ஜாதியாய் வாழுகிறான். பம்பாயிலிருந்து இங்கு வந்த படேல், தேசாய், பிர்லா, பஜாஜ் கூட்டத்தார்கள் திராவிடர்களுடைய ரத்தத்தை உறிஞ்சிக்கொண்டு தங்க சாலைத் தெருவில் சலவைக்கல் கட்டிடத்தில் 3, 4, மோட்டார்களுடனும், 2, 3 பம்பாய்த் தாசிகளுடனும் வாழுகிறார்கள். இங்கு வந்த மார்வாடிகள் தங்கள் ஊர்ப் பாலைவனங்களை ஆகாயம் முட்டும் மாளிகைகளாக ஆக்கிவிட்டார்கள். 5000. ரூ மேல் கையெழுத்து வாங்கிக் கொண்டு ஈரோட்டிற்கு 20 வருஷத்துக்கு முன்வந்த முல்தானி இன்று 25 லக்ஷரூபாய் சம்பாதித்துக் கொண்டு போயிருப்பதல்லாமல் திராவிட நாட்டில் இன்றும் பல இடங்களில் பல கடைகள் வைத்து நடத்துகிறான். இப்படி எங்கள் ஊரில் மாத்திரம் 20 முல்தானிகள் உண்டு. நாட்டுக் கோட்டையர் நிலைமை இறக்கத்தில் இருக்கிறது. மற்ற லேவாதேவிக்காரர்கள் மறைந்து விட்டார்கள். திராவிடப் பழம் பெரும் வியாபாரிகள் கவுன்சிலராக, ஜில்லா போர்டு மெம்பராக, சட்டசபைமெம்பராக, காங்கரஸ் பக்தராக ஆகித் தங்கள் பாப்பர் தன்மையை மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால் ரூபாய்க்கு 4 அணா வீதம்கூட தீர்த்துக் கொடுக்க முடியாதவர்கள் பலருண்டு. நெசவுக்காரனுக்கும் பிச்சைக்காரனுக்கும் வித்தியாசமில்லாமல் போய்விட்டது.

தொழிலாளி நாயிலும் கேடாக மதிக்கப்படுகிறான். இவைகளுக்குக் காரணம் வெள்ளையன் சுரண்டலா? வடநாட்டான் சுரண்டலா? யோசித்துப் பாருங்கள்.

### நாடு பிரிந்தால் நடக்குமோ சுரண்டல்கள்?

திராவிட நாடு தனியாகப் பிரிந்தால் இந்தச்சுரண்டுதல்கள் நடக்குமா? திராவிட நாட்டில் இயந்திரம் பிசாசாகக் கருதப்படுகிறது. வட நாட்டில் இயந்திரம் இரசவாதமாகக் கருதப்படுகிறது. காந்தியார் பிர்லா வீட்டில்தான் தங்குவது. திராவிடர்களைப் பார்த்து யந்திரம் பிசாசு என்பது. திராவிடர்களை ராட்டினமும் தக்ளியும் சுற்றுங்கள் என்பது. குஜராத்தி, மார்வாடிகளுக்கு யந்திரங்கள்பெருக உதவி செய்வது. இதுபோலவே நம்மிடம் வந்து வெள்ளையனை விரட்டுகிறோம் ஓட்டுகொடுங்கள் என்பதும், வெள்ளையரிடம் சென்று திராவிடர்கள் கையில் ராட்டினம் கொடுத்துப் பட்டினி கிடக்கும்படி செய்து தக்ளி கொடுத்து அஹிம்சை உபதேசித்துக் கோழைகளாகவும், மானமற்றவர்களாகவும் ஆக்கிவிட்டேன்; ஆதலால், எங்களுக்கே மந்திரிவேலை வரும்படியான காரியத்துக்கு உதவி செய் என்பதும் ஆகிய, இம்மாதிரி காரியங்கள் திராவிட நாடு பிரிக்கப்பட்டால் நடக்குமா என்று பாருங்கள். காந்தியார் கைவரிசை, பார்ப்பனர் கைவரிசை, காங்கரஸ் பித்தலாட்டம் லங்கையில் செல்லுகிறதா பாருங்கள்.

ஆகையால் திராவிடம் பிரிக்கப்பட்டால் ஒழிய, தமிழனுக்கும் திராவிடனுக்கும் விடுதலைஇல்லை; முற்போக்கு இல்லை என்பதை நினைவில் வையுங்கள்!

---

### செத்தபின்

மனிதன் எப்படிப்பட்டவனானாலும், செத்து விட்டால், அவன் செய்கையின் பலன்தான் எங்காவது நன்மை தீமை விளைவித்துக் கொண்டிருக்கலாமே தவிர, அவன் ஜீவன்—உயிர்—ஆத்மா என்பவைகள் எங்குமே இருக்க முடியாது.

# படத் திறப்புவிழாவினால் பலன் என்ன?

★

நாம் உருவப்படத் திறப்புவிழா நடத்துவது என்பது பூஜைசெய்ய வோ, தேங்காய் பழம் ஆராதனை செய்து விழுந்து கும்பிட்டுப் பக்தி செய்து நமக்கு வேண்டியதைக் கோரிப் பிரார்த்தனை செய்யவோ, நாம் செய்த செய்யும் பாவத்தை மன்னிக்கும்படி கேட்கவோ அல்ல என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட சக்தி இருப்பதாகக் கருதிக் கூட நாம் எந்தப் படத்திறப்புவிழாவும் செய்வதில்லை. மற்றும் எப்படிப் பட்ட படத்திற்கும் பூசை செய் யும்படியோ, கோவில்களிலோதேர், ரதம்விமானம், சப்பரம் ஆகியவை களிலோ வைத்து ஊர்வலம், ஆரா தனை செய்யும்படி காலித்தனம் செய்வதற்கோ ஆகவும் அல்ல. ஆனால் மற்றெதற்கு என்றால் மனித சமூக நலனுக்குச் சுயநல மில்லாமலும், மற்றவர்களிடமும் எவ்விதக் கூலியோ, புகழோ, பிர திப்பிரயோஜனமோ பெறாமலும், தன்முயற்சியால் தன்பொருளால் தன்பொறுப் பென்றுகருதித் தொண்டாற்றி வந்த பெரியார்க ளின் குணாதிசயங்களையும், தொண்டையும் எடுத்துச் சொல்வ தன் மூலம், மற்றும் பலரும் அக் காரியத்தைப் பின்பற்ற வேண்டும் பின்பற்ற—மாட்டார்களா? என்பதற்கு ஆகவே தான்— மனித சமூக நலனுக்குப் பிரதிப் பிரயோஜனம், கூலி இல் லாமல் மக்கள் பாடுபட வேண்டும் என்கின்ற மேலான குணத்தைப் பிரசாரம் செய்வதற்கு ஒரு சாத னமாகவேதான் இக்காரியத்தைச் செய்கிறோம்.

### தியாகர், பனகாலின் சிறப்புகள்.

நாம் அடிக்கடி தியாகராயர்—நாயர், பனகால் அரசர், நடராஜன் முதலியவர்கள் படத் திறப்புவிழா செய்கின்றோம். எதற்காக? அவர் களது கொள்கை எண்ணம் தொ ண்டு ஆகியவைகளை மக்கள் பின் பற்ற வேண்டும் என்பதற்கு ஆகத் தானே. மற்றபடி இவர்கள் எல் லாம் ஆழ்வார்கள், நாயன்மார்கள், பல தேசியத்தலைவர்கள் என்ப வர்களைப் போன்று, மக்களுக்கு மோட்சம் காட்டும் பக்தியைப்பற் றிப் பிரசாரம் செய்து பாமர மக் களை ஏமாற்றிப் புகழ் பெற்றவர் களோ; செத்தபின் கடவுளான வர்களோ, கடவுளுடன்-கலந்தவர் களோ அல்ல. பாமரர்களிடம் பெரும் புகழும் பெற்ற மகான் களுமல்ல. தங்களைக் கோவிலி லும், பூஜை வீட்டிலும் வைத்துப் பூஜிக்கும்படியான மாதிரியில் நட ந்து கொண்டவர்களுமல்ல. அவர் கள் வெகு தைரியமாய்ப் பழைய பழக்க வழக்கங்களையும், மூட மக்களிடமும் சுயநலச்சூழ்ச்சிக்கா ரர்களிடமும் மிகவும் செல்வாக் குப் பெற்று இருக்கும் பழைய கொள்கைகளையும், உணர்ச்சிக ளையும் தகர்த்தெறிந்து மக்களுக் குச் சமத்துவ உணர்ச்சியையும், மனிதத் தன்மையையும் உதிக்கப் பாடுபட்டவர்கள். அப்படிப்பாடு பட்ட எவரும் அவர்களது வாழ் நாள்களில் கஷ்டப்பட்டும் பாமர மக்களால் தூற்றப்பட்டும் துன்பப் படுத்தப்பட்டவர்களுமாகவே இரு ப்பார்கள்.

### நிகழ்காலம் நிந்திக்கும் எதிர்காலம் ஏற்கும்.

உதாரணமாகக் கிரீஸ் தேசத் துச் சாக்ரடீஸ் என்பவர் எந்தக் காரியத்தையும் அறிவால் ஆராய் ச்சி செய்து பார்க்கவேண்டும் என்று சொன்னதற்காக விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டார். கௌதம புத்தர் என்பவர் ஆரியப் புரட்டுகளை எதிர்த்ததற்கு ஆக எவ்வளவோ கஷ்டப்பட்டார். யேசு கிறிஸ்து விக்கிரகாராதனை, கோவில் பூஜை முதலியவைகளை எதிர்த்துப் பிரசாரம் செய்ததற்கு ஆகச் சித்திரவதை செய்து கொல் லப்பட்டார். முகமது நபி அநேக மூடப்பழக்க வழக்கங்களையும், பல தெய்வ உணர்ச்சியையும் பெண் கொடுமையையும் எதிர்த் துப் பல நல்ல கொள்கைகளைப் பிரசாரம் செய்ததற்கு ஆகப்பல சங்கடப்படுத்தப்பட்டார். அப்படிப்பட்டவர்களும், மற்றும் அது போன்ற பல புதிய அபிப்பி ராயம் சொன்னவர்களும், அவர் களது ஆயுள் காலத்தில் இது போல் எவ்வளவு துன்பப்படுத்தப் பட்டு, எவ்வளவு கஷ்டப்படுத்தப்பட்டு, எவ்வளவு தொல்லைப் படுத்தப்பட்டு இருந்தாலும் இன்று அவர்கள் கோடானு கோடி மக்களால் அவர்களது அபிப்பிராயங்களோடு மதிக்கப்படு கிறார்கள். கோடிக்கணக்கானபேர் களால் பின்பற்றப்படுகிறார்கள். அதுபோலவே தான் முற் கூறப் பட்ட பெரியார்களும், நாங்களும் இன்று எங்கள் அபிப்பிராயங்கள் எவ்வளவு தான் வெறுக்கப்பட்ட போதிலும், பாமர மக்களாலும், சுய நலச் சூழ்ச்சிக்காரர்களாலும் எவ்வளவுதான் வெறுக்கப்பட்டுத் தொல்லைகள் விளைவிக்கப்பட்டு அல்லல் பட்டாலும், பிற்காலத் தில் எங்கள் தொண்டு மக்களுக்கு மிக்க பயன் தரக்கூடியதாயும், பாராட்டக்கூடியதாயும், மக்களை ஞான வழியில் நடத்தக்கூடியதா யும் இருக்கும் என்கின்ற நம் பிக்கையுடையவர்களாகவே இருக் கிறோம். இல்லாவிட்டால் இவ்வ ளவு தொல்லைகளுடன் எங்க ளுக்கு எவ்விதத்திலும் சுயநல மற்ற இந்தத்தொண்டைப் பெரும் பான்மையான மக்களுடைய இவ் வளவு வெறுப்பிற்கிடையில் துணிந்து ஆற்ற முனைந்திருக்க மாட்டோம்.

### புகழப்பட்டோர் கண்ட பயன்.

நாங்கள் பாமர மக்களால் வெறுக்கப்படுவதினாலேயே எங் கள் தொண்டின் மேன்மையை உணருகிறோம், பாமரமக்கள் மதித்துப் பக்தி செலுத்திப் புக ழும் படியாக நடந்துகொண்டவர் களுடைய எப்படிப்பட்ட தொண் டும், அபிப்பிராயமும் அவர்களது வாழ்நாளுக்குப் பின் பயன்பட்ட தாக எங்களுக்கு ஆதாரமே கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட வர்களால் மனித சமூகம் திருத் தப்பாடு அடைந்ததாக எவ்வித ருஜுவும் இதுவரை கிடைத்ததில் லை. நாமறிய ஒரு காலத்தில் தில கர் புகழப்பட்டார், பெசண்டம் மையார் புகழ்ப் பெற்றார், காந்தி யும் புகழப்படுகிறார். சரித்திரத் தில் எத்தனையோ ஆச்சாரியர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சுவாமிமார்கள் எனப்பட்ட எத் தனையோ பேர் புகழப்பட்டதாக வும் பார்க்கிறோம். இவர்களில்

பலர் தெய்வீகம் கற்பிக்கப்பட்டார்கள். பலர் தெய்வங்களாகவும் கருதப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இவர்களாலெல்லாம் ஒரு காதொடிந்த ஊசியளவுபயன் மக்களுக்கு ஏற்படுகிறதா? ஏற்பட்டதா? ஏற்படும் என்கின்ற குறியாவது காண்கின்றதா? இவர்கள் எல்லாம் புராணங்களுக்குப் புதிய உரை எழுதுகிற உரையாசிரியர்கள் போல் தோன்றிப் பாமரர்களுடைய பக்திக்கும், பூஜைக்கும், பாராட்டுதலுக்கும் ஆளாகி முட்டாள் தனத்துடனும் அல்லது பாமர மக்களை ஏமாற்றிப்பொய்ப் புகழ் பெற்று வருகிறோமே என்கின்ற உணர்ச்சியுடனும், தானே செத்தார்கள். சாகின்றார்கள். சாகப் போகின்றார்கள் என்று

---

ஆரியர் யோக்கியதையை விளக்க வால்மீகி மகரிஷிகளது ராமாயணம் ஒன்றே போதும். அப்படி இருக்க, அதைத்திருத்தி தமிழ் மக்கள் ஏமாறும்வண்ணம் கற்பிக்கப்பட்டுவிட்டது. இந்தக் கொடுமைக்கும் இழி தன்மைக்கும் நமது பண்டிதர்கள்தான் ஆட்பட்டார்கள் என்றால், நமது நடிப்புக்காரர்களும் பங்குகொள்ள வேண்டுமா என்று கேட்கிறேன்.

நம் மக்கள் புராண நடிப்புகளை பகிஷ்கரிக்கவேண்டும். பகிஷ்கரிக்க பிரசாரம் செய்யவேண்டும். சண்டித்தனம் செய்ய வேண்டும். தனிப்பட்ட மனிதனுடையமானம் போகும்படியான காரியத்தைச் செய்தாவது இந்த சமுதாய மானக் கேட்டை நிவர்த்திக்கப் பாடுபடவேண்டும்.

---

சொல்ல வேண்டி இருக்கிறதே தவிரக் கண் கண்ட பயன் என்ன என்று பாருங்கள்.


பொங்கல் புத்தாண்டில்

டி. கே. எஸ். சகோதரர்களின் புதிய நாடகம்.

கோவை ஷண்முக அரங்கில்

14—1—48 முதல் தினசரி

# உயிரோவியம்

('பிரசண்ட விகடன்' ஆசிரியர் 'ஜீவா' எழுதியது.)

★

பாடல்கள்:—கு. சா. கிருஷ்ணமூர்த்தி.

★

புதன், ஞாயிறு மாலை 6-30.

மற்ற நாட்கள் இரவு 9-30.

திங்கள் விடுமுறை.

வரியுட்பட கட்டணம்:—

4-0-0, 2-12-0, 1-10-0, 0-13-0, 0-6-6.



புதிய வெளியீடு!

அறிஞர் சி. என். அண்ணாதுரை எம். ஏ. எழுதியது

# "சிறுகதைகள்"

விலை ரூ. 1—0—0.

★

கைவசம் உள்ள புத்தகங்கள்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ரோமாபுரிராணிகள் | 2-4-0 | 5. | குமரிக் கோட்டம் | 1-0-0 |
| 2. | கம்பரசம் | 1-8-0 | 6. | ஆரியமாயை | 1-0-0 |
| 3. | கற்பனைச் சித்திரம் | 1-0-0 | 7. | வர்ணாஸ்ரமம் | 0-12-0 |
| 4. | விடுதலைப் போர் | 1-0-0 | 8. | மேதினம் | 0-5-0 |

★

# திராவிடப்பண்ணை,

தெப்பக்குளம் :: திருச்சி

குறிப்பு:— வியாபாரிகளுக்கு 20 சதம் கழிவு தரப்படும். தபால் செலவு தனி. தனிப்பிரதி வேண்டுவோர் தபால் செலவு 0-4-0 அணா சேர்த்து மணியார்டர் அனுப்பவேண்டும்.


### தோல்லைப்பட்டோரால், தோன்றிய நன்மை.

இன்று உண்மையில் மனித சமூகத்திற்கு ஏதாவது புதிய மாறுதல் உணர்ச்சி அல்லது புரட்சிகரமான சுதந்தரம், விடுதலை, சமத்துவம், சுயமரியாதை என்பதான உணர்ச்சி தோன்றி இருக்குமானால் அவை அனைத்தும் ஒரு காலத்திலோ, நேற்றோ, இன்றோ கல்லடிபட்டுக், கொல்லப்பட்டுக், கையடிபட்டு, தொல்லைபட்டு உயிர் துறந்த உயிர் வாழ்கின்ற—வெறுக்கப்பட்டமக்களாலே தான் என்பது ஆராய்ந்து பார்க்கின்ற எவருக்கும் சுலபத்தில் புலப்படும்.

அப்பேர்ப்பட்டவர்கள் எல்லாம் மக்களின் தன்மை உயர வேண்டுமென்று கருதித்தொண்டாற்றியவர்களே ஒழிய, மக்கள் தங்களைப் போற்றிப் புகழ்ந்து பூசிக்க வேண்டுமென்று கருதியவர்கள் அல்ல. ஆதலால் அப்பெரியவர்களை ஞாபகப்படுத்தி, அவர்கள் தன்மையை மற்ற மக்கள் உணர்ந்து அம்மாதிரியான உள்ளம் பெற்று மனித சமூகத்துக்குத் தொண்டாற்ற முற்படவேண்டும் என்பதற்காகவே, அவர்களது உருவப்படத்திறப்பு விழாக்கள் என்ற பெயர் வைத்து இவற்றை எடுத்துக்கொண்டிறோம்.

# என் புரட்சி? எப்பொழுது புரட்சி?

★

இன்று, இங்கு, "புரட்சி நாள்" என்பதன் பேரால், இவ்வளவு பெரிய கூட்டம் கூடியிருக்கிறோம். புரட்சி என்றால் என்ன? எதற்குஆகப் புரட்சி செய்வது? நாம் என் அந்நாளைக் கொண்டாடுகிறோம்? இதிலிருந்து நம் தெரிந்துகொள்ள வேண்டிய தென்ன? என்பவைகளைப்பற்றி முதலில் பேசக் கருதியிருக்கிறேன். பிறகு ரஷியப் புரட்சி நாளை ரஷியாவில் கொண்டாடியதைப் பார்த்ததையும், மற்ற நாடுகளில் கொண்டாடப் பட்டதைப் பார்த்ததையும்பற்றிப் பின்னால் சொல்லுகிறேன்.

ஒரு தலைகீழான மாறுதலுக்குத் தான் புரட்சிநாள் என்பது. ரஷியப் புரட்சி என்பது, கஷ்டப்பட்ட மக்கள் மேலும் கஷ்டப்பட்டு தம் மக்களிடம் இருந்து விடுதலை பெற்றதற்குஆக கொண்டாடும் விடுதலை நாள்!

## பலநாடுகளிலும் புரட்சி விழா.

இது உலகில் எங்கும் கொண்டாடப் படுகிறது. நான் கொஞ்சகாலத்துக்கு முன், அயிரோப்பியச் சுற்றுப்பிரயாணம் சென்று இருந்தபோது, ரஷியாவில் பிப்ரவரிப் புரட்சிநாளும், மே 1ந்தேதி புரட்சி நாளும் கொண்டாடப்பட்டன. அடுத்தமாதம் பெர்லினில் இருந்தேன். அங்கு ஜூன் மாதத்தில் ஒரு புரட்சி நாள் கொண்டாடப்பட்டது. பிறகு லண்டன் சென்றேன், அங்கு ஜூலை மாதத்தில் ஒரு பெரிய தொழிலாளர் புரட்சி நாள் கொண்டாடப்பட்டது.

அதைவிடப் பெரிதாக, பாரிசில் ஆகஸ்ட் மாதத்தில் பிரஞ்சுப் புரட்சி நாள் கொண்டாடப்பட்டதைப் பார்த்தேன்.

அப்படியே ஸ்பெயினுக்குப் போன போது, அங்கும் ஒரு புரட்சி நாள் கொண்டாடினார்கள்.

இப்படியே உலகத்தில் பல இடங்களிலும் கொண்டாடுகிறார்கள்.

நம் நாட்டிலும் புரட்சி நாட்கள் கொண்டாடப்படுகின்றன. ஆனால் நம் நாட்டில் கொண்டாடப்படும் புரட்சி நாட்களை, புரட்சிநாள் என்று சொல்லுவதில்லை. அவற்றைப் பண்டிகைகள் என்றும், உற்சவம் என்றும் சொல்லிக் கொண்டாடுகிறோம்.

இங்கு கொண்டாடப்படும் தீபாவளிப் பண்டிகை ஒரு புரட்சிநாள் கொண்டாட்டம்தான்! அது, ஆரியர்கள் திராவிடர்களை வென்ற நாளையும், திராவிட அரசனைக் கொன்ற நாளையும் கொண்டாடுவது! அதுபோலவே எங்கள் நாட்டில் மற்றும் பல உற்சவங்கள் கொண்டாடுகிறார்கள். அவற்றுள் ஒரு உற்சவம் சமணர்களைச் சைவர்கள் வென்று, சமணர்களை 10 ஆயிரக்கணக்கில் கழுவேற்றிக்கொன்றநாள் கொண்டாடப்படுவதாகும்.

இப்படிப் பல உண்டு. ஆகவே புரட்சி என்றால், முதலாளிக்கும் தொழிலாளிக்கும் மாத்திரம் நடப்பது அல்ல!

ஒரு இனத்துக்கும் மற்றொரு இனத்துக்கும், ஒரு வகுப்புக்கும் மற்றொரு வகுப்புக்கும், ஒரு மதத்துக்கும் மற்றொரு மதத்துக்கும், அரசனுக்கும் பிரஜைக்கும், இன்னும், ஒரு கொள்கைக்கும் மற்றொரு கொள்கைக்கும், இப்படிப் பலவாறாக நடப்பதாகும். இதற்கு ரஷ்யாதான் முதல் ஆதாரம் என்று சொல்லமுடியாது. வெகு காலமாக, வெளிநாடுகளில், புரட்சி நாள் கொண்டாட்டங்கள் நடந்து வருகின்றன.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியதென்ன? நமக்குள்ள கஷ்டங்களை நீக்கிக்கொள்ள புரட்சிசெய்ய வேண்டுமென்பதையும், அவைகள் என்னென்ன என்பதையும், அதை எப்படிச் செய்யவேண்டுமென்பதையும் அதற்குஆக என்ன செய்ய வேண்டுமென்பதையும்பற்றித் தெரிந்துகொள்வதையே. நாம் இப்புரட்சிநாள் கொண்டாட்டத்தின் படிப்பினையாகக் கொள்ளவேண்டும்.

## புரட்சியின் எ, பி, சி, டி.

புரட்சி என்றால் அதில் அடங்கி இருக்கும் உணர்ச்சி, ஒற்றுமையேயாகும். அடுத்தபாகம், தியாகபுத்தியேயாகும். அதற்கு அடுத்தது சுயமரியாதையாகும். ஒற்றுமையும், தன்னலமறுப்பும், சுயமரியாதையும் புரட்சியின் எ, பி, சி, டி. இந்த எ, பி, சி, டி. கூட படிக்காதவன் புரட்சியைப்பற்றி பேசத் தகுதியற்றவன்.

ரஷ்யாவைப் பார்த்து, நம் நாட்டில். புரட்சிக்காரர்கள். "முதலாளி ஒழிக! தொழிலாளி வாழ்க! என்று கூப்பாடு போடுகிறவர்கள், புரட்சியின் எ, பி. சி, டி படிக்காதவர்களேயாகும்.

நம் நாட்டில் ரஷ்யாவில் இல்லாத பல காரியங்கள் புரட்சிக்கு விரோதமாக இருக்கின்றன.

மதத் தொல்லைகள் எவ்வளவு? இனத் தொல்லைகள் எவ்வளவு? ஜாதித் தொல்லைகள் எவ்வளவு? கலை, பழக்க வழக்க, ஆகார, உடை முதலியவைகள் எவ்வளவு? மூடநம்பிக்கை எவ்வளவு? இவைகளைப்பற்றி சிந்திக்கிறோமா? இங்குள்ள புரட்சிக் கூப்பாட்டுக்காரர்கள், தங்கள்மதங்களை விட்டார்களா? இன உணர்ச்சியை, ஜாதியை, குறிப்பிட்ட கலை பழக்க உணர்ச்சிகளை விட்டார்களா? தங்கள் சுயநலத்தை விட்டார்களா? சுயமரியாதையைக் கவனிக்கிறார்களா? எவ்விதப் பேதமுமில்லாமல் ஒற்றுமையாய் இருக்கிறார்களா?

அவைகள் உள்ள நாட்டில்தான் திடீரென்று முதலாளி—தொழிலாளி புரட்சி உண்டாகமுடியும்; ராஜா-பிரஜைகள் புரட்சிகூட முடியும். நாம் அப்படிப்பட்ட புரட்சிக்கு விரோதமாய் இருக்கும் தடைகளை நீக்க முதலில் புரட்சிசெய்யவேண்டும்.

ஜாதி, மதம், மூடநம்பிக்கை ஆகியவைகள் நம்மை விட்டு ஒழியவேண்டும்.

முதலாவதாக, தொழிலாளிக்காவது இவை ஒழிந்தா? தொழிலாளர் தலைவர்களுக்காவது இவை ஒழிந்ததா?

முக்கியமாக ஒருவரை ஒருவர் ஆதிக்கம் செலுத்துவதும், சுரண்டுவதும் நம் நாட்டில் ஒழியவேண்டியதற்கு ஆகவே புரட்சி அவசியமானது. அது எந்தெந்த விதத்தில் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது; யாரை யார் எந்தெந்த விதத்தில் சுரண்டுகிறார்கள்; என்பவைகளைப்பார்த்து, அவைகள் எல்லாவற்றையும் ஒழிக்கப் புரட்சி செய்யவேண்டும். அதுதான் நம்முடைய குறிக்கோள் வார்த்தையாக் இருக்க வேண்டும். வாலிபர்கள் இதை நன்றாய் உணர வேண்டும்.

## புரட்சியாளரின் தகுதியும் வேலையும்

புரட்சி நாட்கள் கொண்டாடுவதால் நமக்கு ஏற்படவேண்டிய படிப்பினை இதுதான். முக்கியமாகப் புரட்சிக்காரனுக்குப் பகுத்தறிவு வேண்டும்; மூடநம்பிக்கை ஒழிக்கப்பட்டவனாகஇருக்க வேண்டும்.

கடவுள் சொல்லை நம்பினவனோ, கடவுள் கட்டளையை எதிர் பார்ப்பவனோ, மனுதர்மக்காரனோ, புரட்சிக்காரனாக ஆகமாட்டான். ரிஷிகளையும், முனிவர்களையும், மகாத்மாக்களையும் நம்புகிறவன் புரட்சிக்காரனாக மாட்டான். புரட்சித் தலைவர்களும், புரட்சி விருப்பமுடையவர்களும் மக்களுக்கு இதை முதலில் கற்பிக்க வேண்டும்.

ஏனெனில், புரட்சித் தன்மை பொதுமக்கள் லட்சியமாக இருக்கவேண்டும். மூட நம்பிக்கையை வைத்துக் கொண்டு, முதலாளி பணத்தைப் பிடுங்கி, தொழிலாளிக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டால், புரட்சி வெற்றி பெற்றுவிட்டதாக ஆகிவிடாது. மூடநம்பிக்கை உள்ளவரை, பணம், முதலாளிக்குப் போய்ச் சேராவிட்டாலும், முதல் இல்லாத முதலாளி ஆகிய கடவுளுக்கும், புரோகிதனுக்கும், மேல் ஜாதிக்காரனுக்கும் போய்ச் சேர்ந்து விடும். மூடநம்பிக்கை உள்ள மக்க

ளைக் கொண்டு, புரட்சியைக் காப்பாற்றும் பலமான ஸ்தாபனம் அமைக்க முடியாது.

ரஷ்யாவில் நான் கண்ட காட்சி.

'ரஷ்யாவின் முக்கியப் புரட்சி நாளாகிய மே, 1ந் தேதியன்று நான் மாஸ்கோவில் இருந்தேன். சுமார் 15 லட்சம் ஜனங்கள், காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை தெருக்களிலேயே இருந்தார்கள்.

ஒவ்வொரு தொழில்காரரும் கூட்டம் கூட்டமாகத் தெருக்களில் கொடியுடனும், பாட்டுகளுடனும், நடித்துக் கொண்டே நகர்ந்த வண்ணமாக இருந்தார்கள். பெண்கள் உற்சாகம் சொல்லி முடியாது. ஊர்வலத்தில், உண்மையில் 3, 4 மைல்நீளம் ஜனங்கள் நிரம்பி வரிசையாக இருந்தார்கள். அதில் பல வேஷங்கள் சென்றன. பாதிரிகளும், முல்லாக்களும், புரோகிதர்களும் குருமார்களும் போல் வேஷம் போட்டு அவர்களைப் போல நடித்துக் காட்டிக் கொண்டே போனார்கள்.

முதலாளிகள், அரசர்கள், ஜமீன்தார்கள் போலவும் வேஷம் போட்டு நடித்துக்கொண்டே போனார்கள்.

பக்தர்கள், ஏழைகள், தொழில் செய்பவர்கள், பிச்சைக்காரர்கள், கூலிக்காரர்கள் முதலியவர்கள்போலவும்வேஷம் போட்டுக் கொண்டு, அவர்களது கொடுமைகளை நடித்துக் காட்டிக்கொண்டும் போனார்கள்.

மற்றும் சுகாதாரம், வைத்தியம், பகுத்தறிவு, சுயமரியாதை ஆகியவைகளின் தன்மையையும், மூடநம்பிக்கை படம் போடுதல், மந்திரித்தல், தீர்த்தம் கொடுத்தல், காதில் உபதேசித்தல், ஊதுதல், ஆகியவைகளையும் நடித்துக் காட்டிக்கொண்டே போனார்கள்.

3 மைல் உள்ள கூட்டம் 10, 15 மைலுக்கு மேலாக நடந்து சென்று சிகப்புச் சதுக்கத்தில் கூடினார்கள்.

பிறகு, மாலையில் வெடிகளும், பாணங்களும், புகைக் கூண்டுகளும், விளக்குகளில் காட்சிகளும், குறிக்கோள் வார்த்தைகளும் காட்டப்பட்டன.

லெனின் சமாதிக்கட்டடத்தின்மீது, ஸ்டாலின் முதலியவர்கள் நின்று கொண்டு, வேடிக்கை பார்த்து வணக்கம் செலுத்திய வண்ணமாய் இருந்தார்கள்.

அய்ந்து வயதுடைய சிறு குழந்தைகளுக்கெல்லாம் புரட்சி என்றால் என்ன? முன் நிலை என்ன? பின் நிலை என்ன? என்பவை நன்றாகத் தெரியும்.

அங்கு பாட்டு, நடிப்பு, டிராமா, சினிமா, வேடிக்கை, சம்பாஷணை, விகடம் எல்லாம் புரட்சி உணர்ச்சியைக் கொடுக்கக்கூடியவைகளேயாகும்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.

# ஆராய்ச்சி விளக்கம்!

★

## ஏழை என்பவன் யார்?

தனது சரீரத்தால் வேலைசெய்து அதன் கூலியினால் மாத்திரமே ஜீவனம் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளவன். இக்கூட்டத்தார்களுக்குத்தான் பார்ப்பன மதப்படி சூத்திரர்கள் என்கின்ற பெயர்.

## முதலாளிகள் என்பவர்கள் யார்?

சரீரத்தினால் வேலைசெய்யும் ஆள்களை வைத்து வேலைகளை வாங்கி, வேலை செய்தவர்களுக்கு ஒரு அளவுக்குள்பட்ட ஜீவனத்துக்கு மாத்திரம் போதுமான கூலி கொடுத்துவிட்டு அவ்வேலையின் மற்ற எல்லாப் பயன்களையும் எல்லையின்றி அனுபவிப்பவர்கள்.

## கீழ் ஜாதியார்கள் யார்?

ஏவலாள்கள் அதாவது, எவ்விதக்கூலியோ சம்பளமோ பேசாமல் இட்டவேலையைச் செய்துவிட்டு கொடுத்த கூலியைப் பெற்றுக்கொண்டு கிடைத்ததற்குள்ளாகவே வாழ்ந்து திருப்தியடைய வேண்டியவர்கள்.

## மேல்ஜாதியார் என்பவர்கள் யார்?

தொழில்களில் கீழான தொழில், மேலான தொழில் என்று கற்பித்து மேலான தொழில்கள், மத்திய தொழில்கள், என்பவைகளை மாத்திரம் செய்துகொண்டு கூடுமானவரை சரீரத்தால் செய்யும் கடினமான வேலைகளைச் செய்யாது தப்பித்துக்கொள்பவர்கள்.

## குடியானவர்கள் என்பவர்கள் யார்?

பூமியைத் தானேஉழுது, தானே பயிர்செய்து தன் குடும்பம் முழுவதும் அதில் ஈடுபட்டு அதன் பயனை அனுபவிப்பவர்கள்.

## மிராசுதாரர்கள் என்பவர்கள் யார்?

தாங்களே நேரில் விவசாயத் தொழிலில் ஈடுபடாமல் ஆள்களைவைத்துப் பயிர்செய்கிறவர்களும், மற்றவர்களுக்கு குத்தகைக்கோ வாரத்துக்கோ விட்டு லாபத்தை மாத்திரம் அடைபவர்களுமான (பூமியை உடைய)வர்கள்.

## பிராமணர்கள் என்பவர்கள் யார்?

எக்காரணம் கொண்டும் சரீரப் பிரயாசைப் படாமலும் எவ்விதத்திலும் நஷ்டமோ கவலையோ அடையவேண்டிய அவசியமில்லாமலும் இருக்கத்தக்க நிலையில் இருந்துகொண்டு, தங்கள் சமூகத்தைத்தவிர மற்றெல்லா மக்களுடையவும் உழைப்பால் திருப்தியான உயிர் வாழ்க்கை வாழ்பவர்கள்.

## பிச்சைக்காரன் என்பவன் யார்?

பாடுபடச் சோம்பேறித்தனப் பட்டுக்கொண்டு ஏமாற்றுவதாலும், சண்டித்தனத்தாலும் கெஞ்சிப் புகழ்ந்து வாழ்பவர்கள்.

## செல்வவான்கள் என்பவர்கள் யார்?

தன் வாழ்க்கைத் திட்டத்திற்குமேல் பணம் வைத்துக் கொண்டிருப்பவர்கள்.

## தரித்திரர்கள் என்பவர்கள் யார்?

வரவுக்கும் மேலாக வாழ்க்கைத் திட்டம் ஏற்படுத்திக் கொண்டு துன்பப்படுபவர்கள்—நாணயமாய் வாழ முடியாமல் நாட்டுக்குத் தொல்லை விளைவிப்பவர்கள். தங்கள் வரவுக்கும் தகுதிக்கும் மேல் வாழ்க்கைத் திட்டம் வகுத்துக் கொண்டு வாழ்பவர்கள்.